நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | பங்குனி 03 | [16 - 3 - 1993] | செவ்வாய்க்கிழமை | ஓசை 26

## ஐரோப்பாவில் 20 வீதமானோர் 60 வயதை தாண்டியவர்கள்

ஐரோப்பிய சமூகம் என்று அழைக்கப்படும் பன்னிரெண்டு நாடுகளைக் கொண்ட ஐரோப்பாவில் தற்பொழுது 60 வயதுக்கு மேற்பட்ட வயதுமுதிர்ந்தவர்கள் மாத்திரம் ஆறு கோடிபேர் வாழ்கின்றனர் என ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. இது இந்த நாடுகளின் மொத்த சனத்தொகையில் 20 வீதமென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி 60 வயதிற்கு மேற்பட்டவர்களின் சனத்தொகை சுமார் 2020 ஆம் ஆண்டில் 25 சதவீதமாக இருக்குமென்றும் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் இவர்கள் மொத்த சனத்தொகையின் (6 ஆம் பக்கம் பார்க்க)

### ( உணவு வாகனப் போக்குவரத்து )

# பூநகரிப் பாதையை திறந்து விடுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கலாம்

## ஐ. நா. அதிகாரிகள் குழு வியாழன் பூநகரி விஜயம்

[கொழும்பு]

யாழ். குடாநாட்டிற்கு தரை வழியாக உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்கு பூநகரிப் பாதையை சிறிலங்கா அரசாங்கம் திறந்து விடலாம் என நம்பகரமாகத் தெரிய வருகின்றது. இதனை ஊர்ஜிதப்படுத்துமாப்போல், எதிர்வரும் வியாழக்கிழமை அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் பூநகரி இராணுவ முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளனர்

கடந்த ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்த அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரி பீற்றர் நிக்கிலஸிடம் உணவு வாகனங்கள் வருவதற்கு பூநகரிப் பாதையைத் திறந்துவிட விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

இதன் பின்னர் கொழும்பு திரும்பிய அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி இது குறித்து சிறிலங்கா அரசாங்கத்திடம் தெரியப்படுத்தியதாகத் தெரியவருகின்றது. அப்பொழுதே அரசாங்கம் பூநகரிப் பாதையை திறப்பது குறித்து சாதகமான முறையில் பரிசீலிப்பதாக கூறியதாகத் தெரிய வருகின்றது. ஆயினும், இது குறித்த விபரங்கள் எவையும் வெளியிடப்படாமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் வியாழக்கிழமை மூவர் அடங்கிய அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் குழு தரை மார்க்கமாக பூநகரி முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளனர். ஐ. நா. இணைப்பதிகாரி திரு. றொபர்ட் இங்கிலாண்ட், அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பொறுப்பதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கிலஸ், திட்ட அதிகாரி திரு. றொட்சிலிப் ஆகியோரே பூநகரி முகாமிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

## மட்டக்களப்பில் அரசுபுரியும் திட்டமிட்ட படுகொலை

### -விடுதலைப் புலிகள் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்களப் படையினர் மேற்கொண்டுவரும் தமிழ் மனிதப் படுகொலைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. நாகரிக உலகில் கொடூரமான முறையில் மனிதப் படுகொலைகளை சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் புரிந்து வருகின்றனர்.

சிறிலங்கா இராணுவத்தின் இப்படுகொலைகளினால் பெரிதும் பாதிக்கப்படுவது பின் தங்கிய கிராமங்களில் வாழும் தமிழ் மக்களேயாவர். இவ்வாறு மட்டு-அம்பாறை அரசியல் துறையினர் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும்;

1990 ஜூன் 11க்கு பின் சிங்களப் படையினர், இம் மாவட்டத்தில் மேற்கொண்ட படுகொலைகளில், ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் பலியாகியுள்ளனர்

படுகொலைகளின் வரிசையில் கடந்த 27 ஆம் திகதி அன்று வாழைச்சேனை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள திகலிவெட்டைப் பிரதேசமும் சிங்கள இராணுவத்தின் கொலைக்களமாக மாறியது. இலுப்பையடிமுன்மாரி, நாவலம்பிட்டி, ஆலையடிச்சேனை ஆகிய கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு ஆறு தமிழ் மக்கள் சிங்கள இனவெறி இராணுவத்தால் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்

சிங்களப் படையினரால் கொல்லப்பட்ட பீதாம்பரம்-நாகநாதன், நாவலம்பிட்டி, ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## புலிகளின் பெயரால் ஊர்காவல் படை கொள்ளை

(மட்டக்களப்பு)

கல்முனைக்கு அருகிலுள்ள சேனைக்குடியிருப்பு பகுதியில் புலிகளின் பெயரைச் சொல்லி முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி கிராம சேவையாளர் புகார் செய்துள்ளார்.

தங்களைப் புலிகள் என்று கூறிக்கொண்டு இரவு வேளைகளில் கோஷ்டியாக செல்லும் இவர்கள் பொது மக்களிடம் கொள்ளையடிப்பதாக பிரதேச செயலக கூட்டத்தில் வைத்து இவர் முறையிட்டார்.

பொதுமக்களிடமிருந்து பெருமளவு பணமும் நகைகளும் இக்கோஷ்டியினரால் (6ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதியில் கரையோரத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன் தினம் இரவு 8.50 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி எறிகணை வீச்சினையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

மேலும் அன்றைய தினம் மீண்டும் இரவு 9.55 மணியளவிலும் அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். இவ் எறிகணைகள் வெளிகொண்ட இடங்களில் வீழ்ந்து வெடித்ததினால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரியவருகிறது. (41)

### அன்னை பூபதி உருவப்படம்

தியாகச்சுடர் அன்னை பூபதியின் வர்ணப் படமொன்று நாளையஈழநாதத்துடன் இலவச இணைப்பாக வெளிவருகிறது. தவறாது கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

## குமண புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்கு உத்தியோக பூர்வ அலுவல்கள் காரணமாக செல்லும் அரச உத்தியோகஸ்தர்களை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலை வரை ''குமண'' கப்பல் இன்று ( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மன்னார் தீவினுள் அதிரடி 3பொலீஸார் பலி; பலர் காயம்

தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. நாகரிக உலகில் கொடூரமான முறையில் மனிதப் படுகொலைகளை சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் புரிந்து வருகின்றனர்.

வாறு மட்டு-அம்பாறை அரசியல் துறையினர் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அச்செய்தியில் மேலும்;

1990 ஜூன் 11க்கு பின் படுகொலைகளின் வரிசையில் கடந்த 27 ஆம் திகதி அன்று வாழைச்சேனை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள திகிலிவெட்டைப் பிரதேசமும் சிங்கள இராணுவத்தின் கொலைக்களமாக மாறியது. இலுப்பையடிமுன்மாரி, நாவலம்பிட்டி, ஆலையடிச்சேனை ஆகிய கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு ஆறு தமிழ் மக்கள் சிங்கள இனவெறி இராணுவத்தால் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சிங்களப் படையினரால் கொல்லப்பட்ட பீதாம்பரம்-நாகநாதன், நாவலம்பிட்டி,

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## புலிகளின் பெயரால் ஊர்காவல் படை கொள்ளை

(மட்டக்களப்பு)

கல்முனைக்கு அருகிலுள்ள சேனைக்குடியிருப்பு பகுதியில் புலிகளின் பெயரைச் சொல்லி முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி கிராம சேவையாளர் புகார் செய்துள்ளார்.

தங்களைப் புலிகள் என்று கூறிக்கொண்டு இரவு வேளைகளில் கோஷ்டியாக செல்லும் இவர்கள் பொது மக்களிடம் கொள்ளையடிப்பதாக பிரதேச செயலக கூட்டத்தில் வைத்து இவர் முறையிட்டார்.

பொதுமக்களிடமிருந்து பெருமளவு பணமும் நகைகளும் இக்கோஷ்டியினரால்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மட்டு. ஆடை தொழிற்சாலை அரசின் கபட நாடகம்

## கிழக்கு தமிழர் ஒன்றியம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான தொழில்களில் தமிழ்மக்கள் ஈடுபடுவதற்கு பாதுகாப்பற்ற ஒரு நிலையை தோற்றுவித்துள்ள சிங்கள அரசு, ஆடைத்தொழிற்சாலை நிறுவுதல் மூலமாக தமிழ்மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக கூறுவது எவ்வளவு வேடிக்கையானதாகவுள்ளது.

இவ்வாறு கிழக்குத் தமிழர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழர்களின் நலனுக்காகவே மட்டக்களப்பில் ஆடைத் தொழிற்சாலை நிறுவப்படுகின்றது. இதனால் தமிழ் இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர் என்றும் சிங்கள அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் பிரதான தொழிலாகிய விவசாயம் சீர்குலைக்கப்படுகிறது, நெறசெய்கையில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், அறுவடைக்குச் செல்லும் தொழிலாளர் தாக்கப்படுகின்றனர், வயலில் வைக்கப்படும் நெற்சூடுகள் சிங்கள ராணுவத்தால் எரியூட்டப்படுகின்றன. வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்ற நெல்மூடைகள் சிங்கள ராணுவத்தால் சூறையாடப் படுகின்றது.

அரைவாசிக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் பாதுகாப்பின்மை காரணமாக தரிசாகிக் கிடக்கின்றன.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழிலெல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# போரிடும் மனப்பாங்கு தலைமையால் நாசம்

## முன்னாள் இராணுவ வீரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆயுதப்படையினரின் போரிடும் மனப்பாங்கு வேறான நோக்கமுடைய அரசியல் தலைமைத்துவத்தால் நாசமாக்கப்படுகிறது என்று முன்னாள் ஆயுதப்படையைச் சேர்ந்த ஒருவர் ஐலண்ட்டுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்; போரைத் தொடர்ந்து நடத்துவதனால் அதற்குரிய மனப்பாங்கு வளர்க்கப்பட வேண்டும் என்றும், பணத்தை ஒதுக்கீடு செய்வதால் மட்டும் போரில் வெல்ல முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பதவியில் இருப்பவர்கள் சுயநலம் மிகுந்தவர்களாகவும், தமது கார்னிவல்களையும், தமாஷாக்களையும் நடத்திக் கொண்டு படையினரின் நடவடிக்கைகள் பற்றி கவனயீனமாகவும் இருக்கும் போது சாதாரண படையினர் தமது உயிரைத் தியாகம் செய்யும் வகையில் போரிட முன்வருவார்களா என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் அண்மையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் பேசுகையில் வருடாந்தம் 2500 கோடி ரூபா வடக்கு கிழக்கு போருக்காக செலவிடப்படுகிறது என்று கூறியுள்ளார். ஆனால் இந்தப் போரில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதே மிக முக்கிய கேள்வி என்றும், பெரிய அளவிலான இராணுவ நடவடிக்கைகள் ஒரு ஸ்தம்பித நிலையை அடைந்திருப்பதையே அவதானிக்க முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரி பீற்றர் நிக்கிலஸிடம் உணவு வாகனங்கள் வருவதற்கு பூநகரிப் பாதையைத் திறந்துவிட விடுதலைப்புலிகள் சம்மதம் தெரிவித்திருந்தமை தெரிந்ததே.

இதன் பின்னர் கொழும்பு திரும்பிய அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதி இது குறித்து சிறி

சாங்கம் பூநகரிப் பாதையை திறப்பது குறித்து சாதகமான முறையில் பரிசீலிப்பதாக கூறியதாகத் தெரிய வருகின்றது. ஆயினும், இது குறித்த விபரங்கள் எவையும் வெளியிடப் படாமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எதிர்வரும் வியாழக்கிழமை மூவர் அடங்கிய அகதிகளுக்கான ஐ. நா.

செய்யவுள்ளனர். ஐ. நா. இணைப்பதிகாரி திரு. றொபர்ட் இங்கிலாண்ட், அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலயப் பொறுப்பதிகாரி டாக்டர் பீற்றர் நிக்கிலஸ், திட்ட அதிகாரி திரு. றொட்சிலிப் ஆகியோரே பூநகரிமுகாமிற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

## புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிற்கு உத்தியோகபூர்வ அலுவல்கள் காரணமாக செல்லும் அரச உத்தியோகஸ்தர்களை ஏற்றிக் கொண்டு திருக்கோணமலை வரை ''குமண'' கப்பல் இன்று

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மன்னார் தீவினுள் அதிரடி 3 பொலீஸார் பலி; பலர் காயம்

(கொழும்பு)

மன்னார்த்தீவில் சிறிலங்கா அரச படைகளின் பூரண கட்டுப் பாட்டில் இருப்பதாக கூறப்படும் பேசாலைப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் மூன்று பொலீஸார் பலியாகினர் இருவர் காயமடைந்தனர். இத்தகவலை சிறிலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் வெளியிட்டன.

பேசாலையில் ரோந்தில் ஈடுபட்டிருந்த சிறிலங்காபொலீஸ் படையினர் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. புலிகளின் தாக்குதலை அடுத்து மூன்று பொலீஸார் பலியாகியதாகவும் ஏனையோர் சிதறி ஓடியதாகவும் செய்திகள் தெரிவித்தன.

பின்னர் ஏனைய பகுதிகளிலிருந்து பெருமளவு இராணுவத்தினர் அப்பகுதிக்கு வரவழைக்கப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிளாலிக் கடற்பரப்பில் ஏழு புலிகள் வீரச்சாவு

கிளாலிக் கடற்பரப்பில் 16 - 12 - 1992 அன்று இடம் பெற்ற கடற்படையினருடனான நேரடி மோதலில் ஏழு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த மேஜர் பூபால் (சிவசுப்பிரமணியம் சிவகுமார் கிறீன் வீதி, திருக்கோணமலை), கப்டன் புரவலன்/ சசாங்கன் (வெள்ளைக்குட்டி பூபாலப் பிள்ளை தம்பலவத்தை மண்டூர் மட்டக்களப்பு), கப்டன் மகேஸ்வரன்/ மகேஸ் (குலசிங்கம் ஸ்ரீபன் டெல்மன், 15, மக்கசர் வீதி, உவர்மலை, திருக்கேணமலை). கப்டன் மகேஸ்(மகேஸ்வரன் அருள்ராஜா, உறுகாமம், கரடியனாறு, மட்டக்களப்பு), கடற்புலி கப்டன் அறிவழகன்/ சாஜகான் (சந்தியாப் பிள்ளை யோன்சன் (றெஜீஸ்) கடற்கரை வீதி, தாழ்வுப்பாடு, மன்னார்) கடற்புலி லெப்டினண்ட் கலியுகன் / கலீம் (சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார், வல்வை வீதி, அச்சுவேலி வடக்கு, யாழ்ப்பாணம்), கடற்புலி லெப்டினன்ட் வெற்றி (நடராசா சுப்பிரமணியம் [குண்டன்], மணற்காடு, குடத்தனை. யாழ்ப்பாணம் [கண்டி] ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தொண்டமனாறு பகுதியில் பீரங்கித் தாக்குதல்

(வடமராட்சி)

தொண்டமனாறு கடற்பகுதியில் நிலைகொண்டிருந்த சிறிலங்கா கடற்படையினர் குடிமனைப் பகுதிகளை நோக்கிநேற்றுபகல்10-30மணியளவில் சரமாரியான பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி வேட்டுக்களையும் ஏவிவிட்டனர்.

கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகளினால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்தனர். குடியிருப்புகள் மீது அரைமணி நேரமாக தொடர்ச்சியாக தாக்குதலை மேற்கொண்டதால் கரையோரப் பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறி உட் கிராமங்களுக்குள் செல்ல நேரிட்டது.

கடற்படையினரின் பீரங்கிக் குண்டுகள் துப்பாக்கி ரவைகள் வெடித்து சிதறிய தூள்கள் பட்டு ஒரு சில வீடுகளின் கூரைப் பகுதிகள் சிறு சிறு சேதம் ஏற்பட்டன

கடற்படையினர் ஏவிய துப்பாக்கி ரவைகள் பீரங்கிக் குண்டுகள் அநேகமானவை தொண்டமனாறுபிள்ளையார் கோவில் பகுதியை இலக்கு வைத்து வீழ்ந்தார். அருகில் இருந்த பாடசாலை, சந்தை உடன் கலைந்தன. அப்பகுதிகள் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டதாக அங்கிருந்து எமது செய்தியாளர் அறிவிக்கிறார். (யோ)

## மொறவேவ காட்டில் புலிகள்-படை மோதல்

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்தின் மொறவேவ காட்டுப் பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே பலத்த மோதல் ஏற்பட்டதாக இராணுவ அதிகாரிகள் கொழும்பில் கூறியுள்ளனர்.

## தமிழர்களை மிரட்டி பணம் பறிப்பு

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவுப் பகுதியிலிருக்கும் அரசடித்தீவு என்னுமிடத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருடன், இணைந்துநிற்கும் தேசவிரோத கும்பல்களைச் சேர்ந்தோர் அப்பகுதி மக்களை மிரட்டிபணம்மற்றும் மாடுகள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதாகத் தெரியவருகின்றது.

## யாழ். ஆயர் தீவுப்பகுதி விஜயம்

(குருநகர்)

யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தீவுப் பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டு நேற்று பிற்பகல் இங்கிருந்து பயணமானார்.

அவருடன் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் வண. ம. இ. பயஸ் அடிகளாரும் சென்றார்.

நேற்று பிற்பகல் பருத்தித்துறை சென்ற அவர்கள் கப்பல் மூலமாக காங்கேசன் துறையை அடைந்து அங்கிருந்து தீவுப்பகுதிக்குச் செல்வர் என்று அறியப்படுகிறது,

(21)

## வரி விளம்பரம்

### மீண்டும் இயங்குகிறது

6-2-93 முதல்மீண்டும்இயங்குகின்றது சோதிட விலாச புத்தகசாலை 46, பெரிய கடை யாழ்ப்பாணம்.எம்மிடம்,சமய நூல்கள், விஞ்ஞான புத்தகங்கள் சோதிட, வைத்திய நூல்கள்,பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள், ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் விற்பனையாகின்றன. சோதிடப்பிரகாசயந்திரசாலை கொக்குவில். (4463)

### விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட். மூத்தவிநாயகர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. வாங்குவோர் வசதிக்காக தொடர்புமுகவரி: ஷண் வர்த்தக விளம்பர ஒலிபரப்பு சேவை, பஸ் நிலையம், யாழ்நகர். (4072)

### எள் உற்பத்தி பாதிப்பு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேசங்களில் நிலவும்வரட்சியினால் இம்முறையும் எள் உற்பத்தி தடைப்பட்டுள்ளது. கடந்த வருடம் இதே காலப் பகுதியில் நிலவிய கொடுமையான வரட்சியினால் எள் உற்பத்தி பாதிப்படைந்து காணப்பட்டது. ஆனால் இம்முறை விவசாயிகள பெரும்சிரமத்தை மேற்கொண்டு அதிகரித்த மேந்தலைச் செலவுகளைச் செய்த போதும் இம்முறையும் எள் உற்பத்தி பாதிப்படைந்துள்ளது. (07)

### பிரஜாவுரிமை பெறலாம்

குறைந்தது 150.000அமெரிக்கடொலர்களை(ஒன்ரரைலட்சம் டொலர்) முதலீட்டிற்காக இலங்கைக்குள் கொண்டுவரும் வெளிநாட்டவர்கள் இலங்கை பிரஜாவுரிமையை கோர தகுதியுடையவர்கள் என நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

### பரிசளிப்பு வைபவம்

கிளிநொச்சி மாவட்டம் முதல் தடைவையாக வகுப்பு ரீதியான சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவருக்கு வருடாந்த பரிசளிப்பு வைபவம் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. ஆறுமுகதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம், கல்விப்பணிப்பாளர் திரு. க.

## வியாபாரப் போட்டி துப்பாக்கிமோதலில் முடிந்தது

போதைப்பொருள் வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டி வீதியில் துப்பாக்கிப் பிரயோகத்தில் முடிந்தது இச் சம்பவம் கடந்த சனியன்று கொழும்பில் நடைபெற்றது. துப்பாக்கிச் சூட்டில் சிக்கி பாதசாரியான அப்பாவி பொது மகன் ஒருவர் பலியானார்.

கொம்பனித்தெரு ரயில் நிலையம் அருகில் கடந்த சனி இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப் படுகிறது.

## முல்லையில் 575 வீடுகள் கடந்தஆண்டு கட்டப்பட்டன

(வடமராட்சி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் 575 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டத்திற்கென புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் கிடைத்த 57 1/2 இலட்சம் ரூபா பணத்தைப் பயன்படுத்தி குறித்த வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மாத வருமானம் 700 ரூபாவுக்குக் கீழ் உள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 575 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீடமைப்பு மானியமாக வழங்கப்பட்டன. மேலும் மிகவும் வறுமையானவர்கள் 35 பேருக்கு வீடமைப்பு மானியமாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு 25 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும், இதே போன்ற திட்டங்கள் 93 ஆம் ஆண்டிலும் செயல்படுத்தப்படவுள்ளனவென்றும் முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு. இரத்தினகுமார் தெரிவித்தார். (யோ)

### அநாதரவான சைக்கிள்

புதுக்காட்டு சந்திக்கு அருகாமையில் உள்ள காடு ஒன்றினுள் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட துவிச்சக்கர வண்டி ஒன்று (11.3.93) அன்று பளை பகுதி தமிழீழ காவல் துறையினரால் மீட்கப்பட்டுள்ளது. (86)

## தாலியை மறந்து சென்றவர் இரு நாட்களின்பின் பெற்றார்

(தென்மராட்சி)

குளத்தில் குளிக்கச் சென்ற பெண்மணி ஒருவர் தனது 8 பவுண் தாலிக்கொடியை கரையில் வைத்துவிட்டு குளித்துவிட்டு மறதியால் வீடு சென்று பார்த்தபோது கழுத்தில் தாலிக்கொடி இல்லாததைக் கண்டு பின் குளத்தில் வந்து பார்த்தபோது அது காணாமல் போய்விட்டது.

பளை காவல் துறையினரிடம் புகார் செய்யப்பட்டது. தாலிக்கொடியை களவு கொடுத்த பெண் இரு நாட்கள் கழித்து குளத்துக்கு சென்ற போது குளக்கரையில் தாலிக் கொடி இருந்ததாக கூறப்படுகின்றது. இச்சம்பவத்தில் பெரியபளை-பளை என்னும் இடத்தில் வசிக்கும் பாலசுப்பிரமணியம இராசேஸ்வரி என்பவரே தாலிக்கொடியை மீள பெற்றவர் ஆவர். (86)

### அம்புலன்ஸ் இல்லை

பளை அரசினர் வைத்திய சாலைக்கு வரும் அவசர நோயாளரை உடன் யாழ். போதனாவைத்தியசாலைக்கு அனுப்புவதற்கு அன்புலன்ஸ்வாகனம் இல்லாமையால் அப்பகுதி மக்கள் மிகவும் துன்பமடைகின்றனர். (86)

## சட்டக்கல்லூரியில் மோசமான ராக்கிங்

கொழும்பு சட்டக்கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவர்கள் படுமோசமான 'ராக்கிங்' க்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் இதுபற்றி கருத்து வெளியிட்ட சட்டக்கல்லூரி மாணவர் ஒருவர் 'நாங்கள்' புதிதாக சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்று சென்ற பொழுது அங்குள்ள சிரேஸ்ட மாணவர் தங்கள் மீது விரும்பத்தகாத படுமோசமான ராக்கிங் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்'' என கூறினார்.

கடந்த வருடம் சட்டக்கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவர்களை 'ராக்கிங்' செய்த குற்றத்திற்காக 12 சிரேஷ்ட மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதும் தெரிந்ததே

## நகைத் தொழிலாளர் சங்கம் அங்குரார்ப் பணம்

ஆட்சிக்கு வந்தால்

# வானொலி தொலைக்காட்சி பி.பி.ஸி. தரத்திற்கு உயரும்

## லலித்தெரிவிப்பு

''நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பத்திரிகைகளுக்கு பூரண சுதந்திரம் வழங்குவோம். வானொலியையும் தொலைக்காட்சியையும் பி.பி.ஸி யின் தரத்திற்கு உயர்த்துவோம். ஒழுக்க நெறியோடு விமர்சிக்க இடமளிப்போம்''

இவ்வாறு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின்சிரேஷ்ட உபதலைவர் லலித் அத்துலத்முதலி அம்பலாங் கொடை நகர சபையில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் இவ்வாறு கூறினார் மேலும் அவர் இவ்விடயம் பற்றிக் கூறுகையில், இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் பூசல்களைஇன்றைய அரசினால் நீக்க முடியாது பத்திரிகைகளும், தொலைக்காட்சியும், வானொலியும் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளினால் உண்மையைத் திரித்து பொய்யை வெளியிடுகின்றன. அரசாங்கம் தொலைக்காட்சியில் சர்க்கஸ் காட்டிக்கொண்டிருக்கின்றது அவற்றை விமர்சித்தால் உதை விழுகின்றது.

அரசாங்க கட்சியில் உள்ளோர் ஜனாதிபதியின் உள்ளத்தை வென்றெடுக்கும் வகையில் பேசுகின்றனர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் நாட்டிற்கு என்ன அழிவு ஏற்பட்டாலும் பேச முடியாத நிலை தென்னையின் மானியத்தை வெட்டியதனால் தான் தேங்காயின்விலை அதிகரித்ததே தவிர வறட்சி காரணமல்ல.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஏற்பட்டதனால் தலையாட்டும் ஆமாம் சாமி போடுவோர் தான் உருவானார்கள் அதில் எமக்கும் பங்கு இருந்ததென்பதை நாம் மறக்கவில்லை. எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது நாம் பொதுஅபேட்சருக்கு எமது ஒத்துழைப்பை வழங்குவோம் எமது கட்சியிலும் ஒரு அபேட்சகரை நிறுத்துவோம் அன்று நாம் சிறிமாவோ பண்டாரநாயக்காவை விமர்சித்தோம் பொது அபேட்சகராக அவர் அல்லது வேறு ஒருவர் முன்வருவாரேயானால் ஜனாதிபதி முறையை ஒழிப்பது உட்பட கொள்கை விளக்கங்களை அடக்கிய கோவைகளை எழுத்து மூலம் சமர்பிக்க வேண்டும்.

இலங்கையில் 20 அரசியல் கட்சிகள் இருந்த போதும் சிறிமாவோ பண்டாரநாக்காவை எட்டுக் கட்சிகளே பொது அபேட்சகராக ஏற்றுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் இது பற்றி பகிரங்கமாகவே ஆலோசித்து வருகின்றோம். சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிலரை எமது கட்சியுடன் இணைத்துக் கொண்டுஐக்கியதேசிகட்சியின் வாக்குகளை நாம் இரண்டாக பிரிக்க தயாராக இல்லை மாகாணசபை, பாராளுமன்ற தேர்தல்களில் எமது வேட்பாளர்கள் அனைத்து ஆசனங்களிலும் போட்டியிடுவார்கள் எமக்கு ஆட்சி அதிகாரம் கிடைத்தால் அரசியல் அமைப்புச் சட்டங்களை மாற்றியமைத்து வெகுஜன தொடர்பாளர்களுக்கு பூரண சுதந்திரம்வழங்குவோம்.

## 16-12-92 அன்று கிளாலி கடலில் வீரச்சாவு




மேஜர் பூபால்



கடற்புலி
கப்டன் அறிவழகன்
(சாஜகான்)





### கல்வி கண்காட்சி

பெரிய புலம் மகாவித்தியாலயம், வேலணை சரஸ்வதி வித்தியாலயம் ஆகியவற்றின் கல்வி கண்காட்சி பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை முதல் வெள்ளி வரை நடைபெறும்.

★ ★ ★

இலங்கை செஞ்சிலுவை சங்க உடுவில் பிரிவு பொது நிகழ்வு கண்காட்சியொன்றை நடாத்தவுள்ளது. இக்கண்காட்சியில் உடுவில் உதவிஅரசாங்க அதிபர்பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் ஆக்கங்களும் தொழிற்திறன், முதலுதவி, சமகால நிகழ்வுகளை கருப்பொருட்களாக கொண்ட ஆக்கங்களும் வைக்கப்படவுள்ளன. (11)

### ம. எண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தனது பகுதியை சேர்ந்த நடைமுறையில் உள்ள ''இ'' அட்டை உரியவர்களுக்கும்மீளாய்வு செய்யப்பட்ட ''உ'' அட்டை உரியவர்களுக்கும் 1 லீற்றர் மண்ணெண்ணெய் 15 ரூபாவுக்கு விற்பனை செய்துவருகின்றது. ''உ'' அட்டை உரியவர்கள் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் அட்டைகளை மீளாய்வு செய்து மண்ணெண்ணெயை உரிய நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாமென பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-16

1986 ஆம் ஆண்டு கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்தியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பரன்** [வேலுப்பிள்ளை தர்மலிங்கம் - 3-ம் வட்டாரம், தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு]

யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சங்கர்** [பாலகிருஷ்ணன் சந்திரசேகர் - புலோலி மேற்கு தம்பசிட்டி, பருத்தித்துறை - யாழ்.]

1987 ஆம் ஆண்டு அம்பாறை - கவுடாப்பிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பொன்றின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ரவி** [— தேவராஜ் - அக்கரைப்பற்று-07 - அம்பாறை]

மணலாறு -புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது பயிற்சி முகாம் ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சன்** [தம்பையா விமலரஞ்சன் - 6-ம் வட்டாரம், குமுழமுனை - மணலாறு]

பிரஜாவுரிமையை கோர தகுதி யுடையவர்கள் என நீதி உயர் கல்வி அமைச்சர் ஏ.சி.எஸ் ஹமீட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## பரிசளிப்பு வைபவம்

கிளிநொச்சி மாவட்டம் முதல் தடைவையாக வகுப்பு ரீதியான சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவருக்கு வருடாந்த பரிசளிப்பு வைபவம் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயத்தில் அதிபர் திரு. ஆறுமுகதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம், கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். (16)

## உறுப்பினராக இணையவும்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் அற்றோர், வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் பழைய உறுப்பினர்களை உறுதிப்படுத்தவும், புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்குமான அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் செயற்படும் இவ் அமைப்பானது அவர்களின் நலன்களைக் கவனிப்பதோடு, உரிமைகள், வேலைவாய்ப்புகள், கல்வி, பயிற்சி, தொழிற்பயிற்சி, புனர்வாழ்வு, அபிவிருத்தி போன்ற பணிகளையும் கவனிக்கும் ஒரு நிறுவனமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே மேற்படி வலுவிழந்தோரான நிறுவனத்தின் பழைய உறுப்பனர்கள் சந்தாப் பணத்தைச் செலுத்தி தமது உறுப்புரிமையை உறுதிப்படுத்துமாறும் இதுவரை இணையாத பதினேழு வயதுக்கு மேற்பட்ட செவிப்புலன் வலுவற்றோர் அனைவரையும் புதியஉறுப்பினர்களாக இணைந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

## பரிசளிப்பு வைபவம்

[யாழ்ப்பாணம்]

புதிய கல்வி நிலையத்தில் கல்வி பயின்று அண்மையில் வெளியான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் ஒன்று நாளை புதிய கல்வி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திரு. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பெற்றோர், நலன் விரும்பிகளை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கள் மிகவும் துன்பமடைகின்றனர். (86)

வரே தாலிக்கொடியை மீள பெற்றவர் ஆவர். (86)

## சட்டக்கல்லூரியில் மோசமான ராக்கிங்

கொழும்பு சட்டக்கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவர்கள் படுமோசமான 'ராக்கிங்' க்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் இதுபற்றி கருத்து வெளியிட்ட சட்டக்கல்லூரி மாணவர் ஒருவர் 'நாங்கள்' புதிதாக சட்டக்கல்லூரியில் அனுமதி பெற்று சென்றபொழுது அங்குள்ள சிரேஸ்ட மாணவர் தங்கள் மீது விரும்பத்தகாத படுமோசமான ராக்கிங் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்'' என கூறினார்.


கடந்த வருடம் சட்டக்கல்லூரியில் புதிதாக சேர்ந்த மாணவர்களை 'ராக்கிங்' செய்த குற்றத்திற்காக 12 சிரேஷ்ட மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டதும் தெரிந்ததே

## நகைத் தொழிலாளர் சங்கம் அங்குரார்ப் பணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட நகைத் தொழிலாளர் சங்கம் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அண்மையில் அங்குராற்பணம் செய்யப்பட்டது. சங்கத்தின் தலைவராக எஸ். எம். சண்முகமும், செயலாளராகப் பி. சக்திவேலும், பொருளாளராக இ. கணேசராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். உபதலைவராக கோ. புவேந்திரமும், உப-செயலாளராக வ. மகேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அந்தியேட்டி அழைப்பு



தோற்றம்:-

1978-11-29

மறைவு -

1993-02-16

செல்வன் **சிவானந்தகுருதிருமால்**

(கிருஷ்ணா)

எதிர்வரும் 1993 . 03 . 18 (வியாழன்) அன்று எமது வீட்டிலே இவரது அந்தியேட்டிக் கிரியைகள் செய்யப்பட்டு, ஊறணிக் கடலிலே அஸ்தி கரைக்கப்படும். அன்று மதியம் வீட்டிலே நடைபெறும் மதிய போசனத்திலே வந்து கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரை வைத்தியத்துக்காக யாழ். போதனாவைத்திய சாலையிலே வைத்திருந்தபோதும், வீட்டிலே நடந்த இறுதிக் கிரியைகளின் போதும் எம்மோடு கூடவேஇருந்து எமக்கு உதவிகள் செய்த, ஆறுதல் சொல்லிய போராளிகள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்களனைவரையும் விசேடமாக அழைக்கின்றோம்.


நன்றி.

குடும்பத்தினர்,
சிறீதரன் (சின்னக்கோபு) வீதி,
வல்வெட்டித்துறை.

(சி,6196)



மேஜர் பூபால்



கடற்புலி
கப்டன் அறிவழகன்
(சாஜகான்)



[கப்டன் புரவலன்
[சசாங்கன்]



கப்டன் மகேஸ்வரன்
[மகேஸ்]



கப்டன் மகேஸ்



கடற்புலி
லெப். கலியுகன்
(கலீம்)



கடற்புலி
லெப். வெற்றி

போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பரன்** [வேலுப்பிள்ளை தர்மலிங்கம் - 3-ம் வட்டாரம், தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு]
யாழ் - அச்சுவேலி, வளலாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சங்கர்** [பாலகிருஷ்ணன் சந்திரசேகர் - புலோலி மேற்கு தம்பசிட்டி, பருத்தித்துறை - யாழ்.]
1987 ஆம் ஆண்டு அம்பாறை - கவுடாப்பிட்டி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பொன்றின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**2-ம் லெப். ரவி** [— தேவராஜ் - அக்கரைப்பற்று-07 - அம்பாறை]
மணலாறு -புதுக்குடியிருப்புப் பகுதியில் எமது பயிற்சி முகாம் ஒன்றின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ரஞ்சன்** [தம்பையா விமலரஞ்சன் - 6-ம் வட்டாரம், குமுழமுனை - மணலாறு]

**மகாலிங்கம்** [அலெக்சாண்டர் சிறில் - சுதந்திரபுரம், உடையார்கட்டு - முல்லைத்தீவு]
முல்லைத்தீவு - தேவிபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

★ **சிவா-அப்பன்-பொடி** [நடராசா கமலநாதன்- உரும்பராய் - யாழ்.]
1988 ஆம் ஆண்டு தமிழகம் திருச்சியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த -

**பத்மநாபன்** [பி. பத்மநாபன் - திருச்சி - தமிழகம்]
கிளிநொச்சி - ஸ்கந்தபுரம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.
மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.
1989 ஆம் ஆண்டு சாவகச்சேரி - மட்டுவில் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர்.
1990 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**மேனன்** [வேலுச்சாமி ஜெகதீஸ்வரன் - 7-ம் வட்டாரம், குமுழமுனை - முல்லைத்தீவு]
1991 ஆம் ஆண்டு கிளி - ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கர்ணன்** [வேலுப்பிள்ளை விக்னேஸ்வரன் - தம்பலகாமம் - பளை]
மட்டு - களுவாங்கேணியில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞன்.
1992 ஆம் ஆண்டு மன்னார் - கொண்டைச்சி முகாமிலிருந்து சிலாவத்துறையை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் மகேஸ்-தியாகு** [சூசை நேசம்டலிமா - கடற்கரை வீதி, 2-ம் வட்டாரம், பேசாலை - மன்னார்]

**லெப். மன்னன்** [நடராசா தயாளகுமார் - 5-ம் வட்டாரம், நெடுந்தீவு - யாழ்.]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர் ஆவார்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6202)

நல்லூர் ... யாழ்ப்பாணம்


# சிக்கனம் காக்க இரட்டைச் சூட்டடுப்பு

நாகரிகம் வளரவளர எமது அன்றாடத் தேவைகளும் பன்மடங்கு அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. அதிகரித்து வரும் தேவைகளில் விறகுத் தேவையானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. யுத்தம் ஆரம்பித்ததற்கு முன்னர் 80 சதவீதமான மக்கள் தமது சமையல் தேவையை விறகினைப் பயன்படுத்தியே பூர்த்தி செய்து வந்த அதேவேளை, 20சதவீதமான மக்கள்ஏனைய எரிபொருள்களையே [மண்ணெண்ணெய், சமையல்வாயு, மின்சாரம், போன்றன] தமது சமையல் தேவைக்கு பயன்படுத்தி வந்தனர். அப்போதைய மக்களின விறகுத் தேவையை வன்னிக் காடுகளே பெரும்பாலும் பூர்த்தி செய்து வந்தன.

தற்பொழுது நிலவும் யுத்த சூழ்நிலையாலும், பொருளாதாரத் தடையாலும் 100 சதவீதமான மக்களும் தமது அன்றாட சமையல் தேவையைப் பூர்த்தி செய்ய முழுமையாக விறகிலேயே தங்கியுள்ளனர். முன்னர் வன்னிக் காடுகள் பூர்த்தி செய்து வந்த விறகுத் தேவையினை யாழ். குடாநாடே தற்பொழுது பூர்த்தி செய்து வருகிறது.

யாழ் குடாநாட்டைப் பொறுத்த வரையிலே மக்களுடைய விறகுத் தேவையினைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு வன்னிக் காடுகளைப் போன்று அடர்ந்த காடுகள் இங்குமிகவும்குறைவு. பற்றைக் காடுகள்தான் கூடுதலாக இங்கு காணப்படுகின்ற போதிலும் அவையும் குறைந்த நிலப்பரப்பிலே தான் அமைந்துள்ளன. இவற்றினைப் பயன்படுத்தி 100 சதவீதமான மக்களுடைய விறகுத் தேவையையும் பூர்த்தி செய்வது என்பது இயலாத ஒரு விடயமாகும். குறைந்தளவு சதவீதமான மக்களுடைய அன்றாட விறகுத் தேவையையாவது பூர்த்தியாக்க முற்படுவோமாயின் யாழ் குடா நாட்டிலுள்ள அனைத்து பற்றைக்காடுகளையும் அழித்துவிட வேண்டும். அவ்வாறு செய்ய முற்படுகின்ற போது எமது எதிர்காலம் பாலைவனமாகி சூழல் பாதுகாப்பிலே பாதகமான ஒரு விளைவை ஏற்படுத்தும்.

தற்போது இங்குள்ள அனேகமான மக்கள் விறகினை விலை கொடுத்து வாங்கியே சமையல் தேவையைப் பூர்த்தியாக்க வேண்டிய நிலையிலுள்ளனர். விறகினை வாங்க முற்படும் போது விறகு வியாபாரிகளும் வெறும்வளவுகளிலுள்ள மரங்களை தறித்து விறகாக்கின்றனர். அவ்வாறு பெறும் விறகின் விலையும் பன்மடங்கு அதிகரித்ததாகவே உள்ளது.



அதனைக் கொள்வனவு செய்து விறகுத் தேவையினைப் பூர்த்தி செய்ய முற்படுகின்ற அன்றாடம் உழைத்து உண்பவர்களும், இடம் பெயர்ந்தவர்களும் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர்.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதாயின் விறகுப் பாவனையை முற்றாகத்தடை செய்ய வேண்டும், அல்லது கட்டுப்படுத்த வேண்டும். முற்றாகத் தடுப்பது என்பது சாத்தியமற்றது. எனினும் கட்டுப்படுத்துவது சிறந்ததொன்றாகும். விறகுப் பாவனையைக் கட்டுப்படுத்துவதே தற்போது மிகச் சிறந்ததொரு வழி முறையாகும். இதற்கு சிறந்த வழி இரட்டைச்சூட்டடுப்பினை பாவிப்பதேயாகும். இதனைப் பயன் படுத்துவதன் மூலம் 30% மான விறகினை மீதப்படுத்த முடியும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இரட்டைச் சூட்டடுப்பு பாவனை முறையானதுபெரிய தொழில் நுட்பம் கொண்டதல்ல. விறகிற்காக அதிக பணத்தை செலவிட்டுக் கொண்டிருக்கின்ற இந்தச் சமயத்திலே இரட்டைச் சூட்டடுப்பினுடைய உருவாக்கம் ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம். விறகினைச் சிக்கனப்படுத்துவதோடு மட்டுமல்லாது நேரத்தினையும் மிச்சப் படுத்திக் கொள்ளக் கூடியதாக இருப்பது இந்த அடுப்பின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். அடுப்பினை மூட்டியவுடன் இரண்டு அடுப்புகளிலும் பாத்திரங்கள் வைக்கவேண்டும்.

முதல் அடுப்பிலே பாத்திரத்தை வைக்கின்றபோது அடுப்பின் விளிம்புடன் பாத்திரம் ஒட்டியிருக்க வேண்டும். மாறாக இரண்டாவது அடுப்பிலே பாத்திரத்தை வைக்கின்றபோது இடைவெளி இருக்கக் கூடியவாறு வைக்க வேண்டும். விறகுகளை வைக்கின்ற போது நிறைய விறகுகளை அடையாது இரண்டு அல்லது மூன்று விறகுத் துண்டுகள் வைத்தால் போதுமானது. இந்த அடுப்பிலே காணப்படுகின்ற இரண்டு துவாரங்களையும் எந்தவித காரணம்கொண்டும் அடைக்கக்கூடாது. இவ்விதமான முறைகளைக் கையாளுகின்றபோது விறகுச் சிக்கனம் கடைப்பிடிக்கப்படும்.

விறகினால் ஏற்படும் அதிகூடிய செலவீனத்தை ஓரளவு சிக்கனப்படுத்துவதாக இரட்டைச் சூட்டடுப்புகள் விளங்குவதோடு மட்டுமல்லாது, எமது வனவளம் அழிக்கப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதோடு மக்களின் பொருளாதாரக் கஷ்டங்களையும்குறைத்துக்கொள்வதற்குமாக தோன்றியுள்ள அதி சிறந்த சாதனமாக இது விளங்குமென்பதில் எந்தவித மான ஐயமுமில்லை.

- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

## நஷ்டஈட்டு கோரிக்கையால் அதிகாரிகள் சினம்

[கொழும்பு]

மட்டக்களப்பில் கடந்த திங்களன்று நடைபெற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக சேவைகள் அமைச்சின் நடமாடும் சேவைக்கு சமுகமளித்திருந்த சுமார் ஆறாயிரம் பேர் ஏமாற்றத்துடன் திரும்பியிருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இரவோடு இரவாக மட்டக்களப்பு நகருக்கு வந்திருந்த பெரும்பாலானோர் நண்பகல் வரை கால்கடுக்க வரிசையில் காத்திருந்தபோதும் ஏமாற்றத்துடனேயே திரும்ப நேரிட்டது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருலட்சத்திற்கும் அதிகமாகும். இவர்கள் பெரும்பாலும் தங்களுக்குரிய நஷ்டஈடு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே வந்திருந்தனர்.

இந்த நடமாடும் சேவை ஜனாதிபதி நடமாடும் சேவைக்கு முன்னோடி நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

புனர்வாழ்வு அமைச்சர் பி. தயாரத்தினாவும், புனர்வாழ்வு ராஜாங்க அமைச்சர் சமந்தா கருணரத்தினாவும் தமது அதிகாரிகளுடன் கலந்து கொண்டனர்.

எனினும் அதிகாரிகள் காலைமுதல் ஒவ்வொருவராக அழைத்து குறைகளை கேட்ட போது எல்லாக் கோரிக்கைகளும், நிவாரணம், நஷ்டஈடு என்பவற்றின் அடிப்படையிலேயே இருந்தது.

இதனால் சினமடைந்த அதிகாரிகள் செயலக வாசலுக்கு வந்து அங்கு வரிசையில் காத்திருந்தோர் வைத்திருந்த கடிதங்களைப் பெற்றுக்கொண்டு அவர்களை வீட்டுக்கு செல்லுமாறு பணித்தனர் ஏமாற்றத்துடன் மக்கள் திரும்பிச்சென்றனர்.

இறந்தோரின் பெயரால் 907 நஷ்டஈட்டுக் கோரிக்கைகளும், காயமடைந்தோர் பெயரால் 590 கோரிக்கைகளும், இவற்றைவிட வீடு வாசல்களை இழந்தமைக்கான நஷ்டஈட்டுக் கோரிக்கைகளும் கொண்டு மக்கள் நடமாடும் செயலகத்திற்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொது அறிவுப் போட்டி

யாழ் மத்திய கல்லூரிக்கும் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையிலான பொது அறிவுப் போட்டி ஒன்று இம் மாதம் 24 -ம் திகதி புதன் கிழமை அதிபர் சு.சண்முகநாத பிள்ளை தலைமையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ளது. [88]

## புலிகளுக்கு தொடர்பென சரத்பாவர் கூறவில்லையாம்

(பம்பாய்)

பம்பாய் வெடிகுண்டு சம்பவங்களுக்கு காரணமாக இருந்த வெடிகுண்டுகள் பாலஸ்தீன விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் என்பவை பயன்படுத்தும் வெடிகுண்டுகள் போல் இருப்பினும் இச்சம்பவங்களில் இந்த இயக்கங்கள் தொடர்புகொண்டிருப்பதாக மகாராஷ்டிர முதலமைச்சர் சரத்பாவர் கூறவில்லை என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

குண்டு வெடிப்பு சம்பவங்களுக்காக 200 கிலோகிராம் வெடிமருந்து பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என பம்பாய் பொலீஸ் பிரதம அதிகாரி அமர்ஜித்சிங் சம்ரா தகவல் வெளியிட்டார். இச்சம்பவம் தொடர்பாக மூன்று பொலீஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வருவதாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## அரசாங்க ஊழியர்களின் கட்சி குறித்து விசாரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் அவர்கள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் என்பது பற்றி விபரம் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய விபரங்கள் ஏன் சேகரிக்கப்படுகின்றன என்பது புரியாத புதிராக இருப்பதாகவும் இதனால் ஊழியர்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும் வீடுகளுக்கும் சென்று இது போன்ற விபரங்கள் கேட்டுப் பதியப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## "ஏழ்மையை சுருட்டினாய் இளையோய்வாழி"

(வடபிராந்தியச் சுருட்டுத் தொழிலாளர் சங்க 2-ம் வருட விழாவினையொட்டி கொக்குவில் இல 71-ல் உள்ள, ரீ ரீ. சுருட்டு உற்பத்தி நிறுவனத்தால் வழங்கப்பட்ட வாழ்த்து மாலை)

### காப்பு

ஏழ்மையைச் சுருட்டினாளிவ்விளையோள் வாழ
வேழமுகன்றுணை காப்பதாமே.

### ஈராண்டின் குழவியிவள்

தமிழினத்தின் விடிவிற்காய் உழைத்து நின்ற
தகமைமிக்கர் தொழிலாளர் வாழ்வேயோங்க
அமிழ்தான தலைமையொன்றமைத்துநின்றார்
அதனாமம் வ. பி. சுரு. தொழிலாளர் சங்கமென்பர்
ஏழ்மை மிக்கார் உயர் நலத்தைப்பேணி நின்றாய்
தூய நல்லுறவுற்பத்தியாளரிடம் தோய்ந்தே தந்தாய்
எழிலான வண்ணவுடைப் பயிற்சியுடனே
இங்கிதமாந் தட்டுப்பொறியினிதே தந்தாய்
கால்நடைதம் வளர்ச்சிக்காய் மாகடனுமீந்தாய்
காசினியிற் கருதிரியாய் கனிந்தாய் வாழி

### உற்பத்திக் கடனீந்தாய் உயர்ந்தாய்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று
பங்குனி அவிட்டமது கூடிடும் பதினாறாம் நாளில்
அணங்கிவள் தமிழீழம் வாழ அவதரித்தாள் நன்றே
அரியதொழுநிைறை வாழ்விற்காயிவள்
அளித்த கடனுதவி ஒரு லட்சத்தெழுபத்திரண்டு
அரிவையிவளீராண்டிற் குழவி அதிசயஞ் செய்தனள்
என்றே அவனி புகழ்கின்றனன் இன்றே நன்றே
இன்னுயிரை யீந்திட்டார் குடும்பமென்றும்
இளையரிவர் பயிற்சி பெற்றாரென்றுமிணைந்தார்.

### தாகந் தீர்த்தாள் தருமைக்குழவி

ஓரிரண்டாண்டினுள்ளே ஈழம் காணா
உயிர் எழுச்சி உயர் எழுச்சி கண்டார்
மேநாளில் இவர் வருகை காத்து நின்றே
மேதினியிலிவள் தாகந் தீர்த்து வந்தாள்

### தொழிலாளர் வகை தன்னை

தொழிலாளர் வரவு செலவுத் தூய்மை காட்டியிவர்
தொழில் தோறூக்குவிப்பை யென்றும் பெற
வழிம்தவி குழவியிவள் சமைத்து நின்றாள்
வையம் வாழ ஏழை வழி தந்தாள் வாழியிவள்வானேபோற்ற

### ஈழ உறவு தந்த கறுப்பியிவள்

திருமலையில் வந்தவெம் மாவீரர்க்காய்
திகழ்ந்தொளிரு மாவீரர்விழ வதனில்
உருவுடனே தலைமை ஏற்று தவிதந்தாள்
உகந்து நின்றாள் செருக்களத்தா ருறவைப் பாடி.
எத்தனை வறியரிவளாற் சிரித்து நின்றார்
ஏழைகள் எக்களிப் பிலிவள் வாழ்வளென்றும்
சிந்தனை அன்பாற் சுருட்டி நின்றாள்
சித்துக்கள் புரிந்து நின்றாள் திருவாரடியில்.
கருவுடைத் திருவுடையாள் கறுப்பிதான்—நிதங்
கடைக் கணருள் பொழிந்திடுவள்—இக்
கலைக்காய் அன்பீர்—யிருநிலமிவள்
தகு நிதியம் பெற்றிணையிலா தென்றென்றும் வாழி நன்றே.

கம் என்பவை பயன்படுத்தும் வெடிகுண்டுகள் போல் இருப்பினும் இச்சம்பவங்களில் இந்த இயக்கங்கள் தொடர்பு கொண்டிருப்பதாக மகாராஷ்டிர முதலமைச்சர் சரத்பாவர் கூறவில்லை என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

வெளியிட்டார். இச்சம்பவம் தொடர்பாக மூன்று பொலீஸ் குழுக்கள் விசாரணை நடத்தி வருவதாகவும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## அரசாங்க ஊழியர்களின் கட்சி குறித்து விசாரிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மத்தியில் அவர்கள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் என்பது பற்றி விபரம் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய விபரங்கள் ஏன் சேகரிக்கப்படுகின்றன என்பது புரியாத புதிராக இருப்பதாகவும் இதனால் ஊழியர்கள் மத்தியில் பதற்றம் நிலவுவதாகவும் வீடுகளுக்கும் சென்று இது போன்ற விபரங்கள் கேட்டுப் பதியப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## 100 இலங்கைப் பெண்கள் மாலைதீவில் தடுப்பு

(மாலைதீவு)

இலங்கையை சேர்ந்த சுமார் 100 பெண்கள் மாலைதீவின் ஒரு பகுதியில் பலவந்தமாக வைக்கப்பட்டு இருப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பெண்கள் முன்னர் பிரிட்டிஷ் இராணுவ விமான நிலையம் ஒன்றில் தொழில் புரிந்ததாகவும், மூன்று வருட காலம் இவர்களுக்கு சம்பளம் வழங்கப்படாமல் இருந்ததாகவும் எனவே இவர்கள் தமது நாட்டிற்கு திரும்ப மறுத்ததை தொடர்ந்து இந்த நிறுவனம் இவர்களை இங்கு தடுத்து வைத்திருப்பதாகவும் தெரிய வருகின்றது.

## மரம் நடுகை திட்டத்தில் சேமிப்பு புத்தகம் வழங்கல்

[வடமராட்சி]

வடமராட்சி கல்விக்கோட்ட மட்டத்தில் மரம் நடுகைத்திட்டத்தில் இணைந்த மாணவர்களுக்கு சேமிப்பு புத்தகம் வழங்கல் கூட்டம் ஒன்று இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு ச. செல்லத்துரை தலைமையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இவ்வைபவத்தில் வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன், வடமராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரூபன்ராஜ், பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி முருகேசம்பிள்ளை, கரவெட்டி பிரதேச செயலர் திரு.செ. ஸ்ரீநிவாசன், மருதங்கேணி பிரதேச செயலர் திரு. கேதீஸ்வரன், விநாயகர் தரும நிதியத்தைச் சேர்ந்த திரு.ஆ. சி. முருகுப்பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

மற்றும் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை வட- இந்து மகளிர் கல்லூரி, கரணவாய் பொன்னம்பல வித்தியாலய மாணவ மாணவிகளினது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [யோ]

## யாழ். பல்கலை கழகத்தில் ஜெனரேற்றர் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்தில் வைக்கப்பட்டிருந்த ஜெனரேற்றர் (மின்பிறப்பாக்கி) ஒன்று களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழன் இரவு நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக ஆறு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

---

ஏழ்மையைச் சுருட்டினாளிவ்விளையோள் வாழ
வேழமுகன்றுணை காப்பதாமே.

### ஈராண்டின் குழவியிவள்

தமிழினத்தின் விடிவிற்காய் உழைத்து நின்ற
தகமைமிக்கர் தொழிலாளர் வாழ்வேயோங்க
அமிழ்தான தலைமையொன்றமைத்துநின்றார்
அதனாமம் வ. பி. சுரு. தொழிலாளர் சங்கமென்பர்
ஏழ்மை மிக்கார் உயர் நலத்தைப்பேணி நின்றாய்
தூய நல்லுறவுற்பத்தியாளரிடம் தோய்ந்தே தந்தாய்
எழிலான வண்ணவுடைப் பயிற்சியுடனே
இங்கிதமாந் தட்டுப்பொறியினிதே தந்தாய்
கால்நடைதம் வளர்ச்சிக்காய் மாகடனுமீந்தாய்
காசினியிற் கருதிரியாய் கனிந்தாய் வாழி

### உற்பத்திக் கடனீந்தாய் உயர்ந்தாய்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்று
பங்குனி அவிட்டமது கூடிடும் பதினாறாம் நாளில்
அணங்கிவள் தமிழீழம் வாழ அவதரித்தாள் நன்றே
அரியதொழுநிறை வாழ்விற்காயிவள்
அளித்த கடனுதவி ஒரு லட்சத்தெழுபத்திரண்டு
அரிவையிவளீராண்டிற் குழவி அதிசயஞ் செய்தனள்
என்றே அவனி புகழ்கின்றனன் இன்றே நன்றே

### வண்ண உடைப் பொறித்தட்டாய் வளர்ந்தாய்

மூன்றணியாயொரு நூற்றெண்பதின் மகளிர்
முழு நிறைவுப் பயிற்சி பெற்றார் வண்ண உடையமைப்
பீன்றயிவளி வருள்ளங்கள் வாழ்கின்றாளிவள்
மட்டுமின்றியொரு நாற்பதின் மரோங்கு பொறித்
தட்டச்சிற் பயிற்சியுற்றார் உவந்தெங்கு நம்
தமிழீழ மோங்க ஒளிர்கின்றார் பணிமனைகள்
ஒளிர் நின்றிடவே.
இங்கி வருமினிய தொழிலாளருடனேயிலா
வறுமையுற்றுழலுமெம் மனோர் பலரும்
இணையில்லா ஈழங்காக்க வென்றே

மேநாளில் இவர் வருகை காத்து நின்றே
மேதினியிலிவள் தாகந் தீர்த்து வந்தாள்

### தொழிலாளர் வகை தன்னை

தொழிலாளர் வரவு செலவுத் தூய்மை காட்டியிவர்
தொழில் தோறூக்குவிப்பை யென்றும் பெற
வழிதேவி குழவியிவள் சமைத்து நின்றாள்
வையம் வாழ ஏழை வழி தந்தாள் வாழியிவள்வானேபோற்ற

### ஈழ உறவு தந்த கறுப்பியிவள்

திருமலையில் வந்தவெம் மாவீரர்க்காய்
திகழ்ந்தொளிரு மாவீரர்விழ வதனில்
உருவுடனே தலைமை ஏற்று தவிதந்தாள்
உகந்து நின்றாள் செருக்களத்தா ருறவைப் பாடி.

எத்தனை வறியரிவளாற் சிரித்து நின்றார்
ஏழைகள் எக்களிப் பிலிவள் வாழ்வளென்றும்
சிந்தனை அன்பாற் சுருட்டி நின்றாள்
சித்துக்கள் புரிந்து நின்றாள் திருவாரடியில்.

கருவுடைத் திருவுடையாள் கறுப்பிதான்—நிதங்
கடைக் கணருள் பொழிந்திடுவள்—இக்
கலைக்காய் அன்பீர்—யிருநிலமிவள்
தகு நிதியம் பெற்றிணையிலா தென்றென்றும் வாழி நன்றே.

செல்வச்சீர் உருத்திரனார் சேவை நின்றார்
எல்லிலும் பகலிலு மிவளினிமை காப்பார்
வல்லவிவர் பக்கல் நின்ற வளமார் குழுவும்
வளம்பல கண்டேயிவளை வளர்த்து நிற்க
தில்லையிலே பக்கல் நின்றாள் தின மருளை
தேடியிறைக் கின்றாளால் தெரிந்தாய் வாழி

சுபமங்களம்.

அன்பன்

T, திருநாவுக்கரசு
17, T. T. சுருட்டு உற்பத்தியாளர்
கொக்குவில்.

[சி-6205].

---


# வடபிராந்திய
# சுருட்டுத் தொழிலாளர் சங்க
## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

**இடம் :-** கொக்குவில் இந்துக் கல்லூரி

**காலம்:-** 16 - 03 - 1993 செவ்வாய்க்கிழமை

**நேரம்:-** மாலை 2 - 00 மணி

இக்கூட்டத்திற்கும் நிர்வாகசபைத் தெரிவிற்கும் தமிழீழத்திலுள்ள
தமிழ்த்தாய் பெற்றெடுத்த சகல சுருட்டுத் தொழிலாளர்களும்
சமுகந்தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

- நிர்வாகிகள்

(சி/6203)

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

## 16-12-1992 அன்று யாழ். மாவட்டத்தின் கிளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த வீரவேங்கைகள்



**கப்டன் புரவலன்** (சசாங்கன்)
வெள்ளைக்குட்டி பூபாலப்பிள்ளை
தம்பலவத்தை, மண்டூர், மட்டக்களப்பு.



**மேஜர் பூபால்**
**சிவசுப்பிரமணியம் சிவகுமார்**



[illegible] **கடற்புலி**
**கப்டன் அறிவழகன்** [சாஜகான்]
சந்தியாப்பிள்ளை யோன்சன் [றெஜீஸ்]
கடற்கரை வீதி, தாழ்வுப்பாடு, மன்னார்.







**கப்டன் புரவலன்** (சசாங்கன்)
வெள்ளைக்குட்டி பூபாலப்பிள்ளை
தம்பலவத்தை, மண்டூர், மட்டக்களப்பு.



**மேஜர் பூபால்**
**சிவசுப்பிரமணியம் சிவகுமார்**
கிறீன் வீதி, திருக்கோணமலை



**கடற்புலி**
**கப்டன் அறிவழகன்** [சாஜகான்]
சந்தியாப்பிள்ளை யோன்சன் [றெஜீஸ்]
கடற்கரை வீதி, தாழ்வுப்பாடு, மன்னார்.




**கப்டன் மகேஸ்வரன்** (மகேஸ்)
குலசிங்கம் ஸ்ரீபன் டெல்மன்
15, மக்கசர் வீதி, உவர்மலை,திருக்கோணமலை.


எல்லை மண்ணதன் துயர்தனையறிந்தீர்
வில்லின் அம்பென விரைந்தீர் அவ்விடம்
தொல்லைகள், மக்கள்தம் சோகங்கள் கேட்டீர்
துடித்தீர்; பகைவர்தம் பாசறை தகர்த்தீர்!
எதிரிகள் சிதறினர் பிணங்களாய் சாய்ந்தனர்
இன்னும்சிலரோ எடுத்தனர் ஓட்டம்!

வெற்றிக்களிப்புடன் திரும்பிய வழியில்
கிளாலிக்கடல்தனில் இன்னுமோர் கடுஞ்சமர்
எதிர்கொண்டீர்; கருவிகள் எடுத்து முழங்கினீர்!
இயந்திரக்கழுகுகள் துப்பிய நெருப்பில்
எரிந்துபோனீரோ... எவ்விதம் நடந்தது-..?

கடலும் காற்றும் இரைந்து இரைந்து
உங்கள் பணியினை எம்முள் உரைத்திடும்
எங்கள் வானம் விடிந்திடும் வரையிலும்
எம்மண் சோகம் கரைந்திடும் வரையிலும்
உங்கள் நினைவுகள் உள்ள வரையிலும்
எங்கள் சிறகுகள் இன்னும் விரிந்திடும்!



**கடற்புலி**
**லெப். கலியுகன் (கலீம்)**
சச்சிதானந்தம் கிருஷ்ணகுமார்
வல்வை வீதி, அச்சுவேலி வடக்கு, யாழ்ப்பாணம்.



**கப்டன் மகேஸ்**
மகேஸ்வரன் அருள்ராஜா
உறுகாமம், கரடியனாறு, மட்டக்களப்பு.



**கடற்புலி**
**லெப். வெற்றி**
நடராசா சுப்பிரமணியம் [குண்டன்]
மணற்காடு, குடத்தனை, யாழ்ப்பாணம். (கண்டி)

**- நண்பர்கள்**

(சி-6204)

நல்லூர் நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

எப்பொழுதும் அறியாமையில் இருந்து பிறப்பதே அச்சம்.

— ரால்ஃப்வால்டோ எமெர்ஸன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-03-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## பிரேமா அரசை வாழ்விக்கும் யுத்தம்

உலக வரலாற்றில் யுத்தங்களை ஆரம்பித்த அரசுகள் அநேகமாக அவற்றை நிறுத்துவதில்லை. அவ்வாறு நிறுத்துவதானால், யுத்தத்தில் வெற்றி பெற வேண்டும் அல்லது யுத்தத்தில் தோல்வி ஏற்பட வேண்டும். இதில் வெற்றி பெறாத யுத்தம் எதையும் ஆரம்பித்தவர்கள் நிறுத்துவதில்லை. அவ்வாறு யுத்தத்தை நிறுத்துவது அவர்களின் பதவிக்கு உலை வைத்துவிடக் கூடியதுமாகும்,

இன்று பிரேமதாசா அரசாங்கத்தின் நிலையும் அதுவே. அரசாங்கம் வெல்ல முடியாத யுத்தம் என தெரிந்து கொண்டும் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதையே விரும்புகின்றது. ஏனெனில் இன்று பிரேமதாசாவின் ஆட்சியே இந்தயுத்தத்திலேயே தங்கியுள்ளது. யுத்தம் நின்றால் ஆட்சி கவிழ்வது உறுதி.

அண்மையில் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் பேசிய சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம். பி. ஒருவரும் இதனைச் சுட்டிக் காட்டியுள்ளார். ''இனப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் யுத்தத்திற்கு முடிவு காண இந்த அரசாங்கம் விரும்பவில்லை. பிரச்சினையை நீடிப்பதன் மூலம் தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளும் முயற்சியில் இந்த அரசாங்கம் நொண்டிச்சாட்டுக்களை கூறிக் கொண்டிருக்கின்றது. பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் அரசிடம் சிறிதும் இல்லை'' என குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. யின் இக் குற்றச்சாட்டு முற்றிலும் சரியானது. -ஆனால், சுதந்திரக்கட்சிக்கோ, அதன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ இது குறித்துப் பேசுவதற்கு எந்தளவிற்கு தார்மீக உரிமை உள்ளது என்பது வேறு விடயம் - அரசு யுத்தத்தை சாட்டாக வைத்துத் தனது ஆட்சி அதிகாரத்தைப் பலப்படுத்துவதிலும், தமது அரசியல் எதிரிகளை ஓரங்கட்டுவதிலும், ஒழித்துக்கட்டுவதிலுமே அக்கறை காட்டுகின்றது.

இலங்கையில் பல வருடங்களாக அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. இது யுத்தத்தினைக் காரணம் காட்டி அரசாங்கத்தினால் மாதாமாதம் நீடிக்கப்பட்டு வரும் ஒன்றாக இருக்கின்றது. ஆனால் இவ்அவசரகால விதிகள் யுத்தம் நடை

# ஜெயலலிதா - நரசிம்மராவ் ஒத்துப் போக முடியவில்லை

இடையிடையே சில காலம் ஊடல் நிலவினாலும் கூட சுமார் பதினைந்து ஆண்டு காலம்வரை நீடித்த அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் ஒருதலைப்பட்சமான அறிவிப்பையடுத்து முறிவடைந்து போயுள்ளது. இந்தக் கூட்டணிக்கு இடையில் கசப்பு உணர்வு எப்போது முதல் முளைவிட ஆரம்பித்தது என்றோ, விரிசல் எங்கிருந்து தொடங்கியதுஎன்றோ ஆராய முனைவது நதிமூலம், ரிஷிமூலம் தேடுவது போன்ற நிலையைத்தான் தோற்றுவிக்கும். எனினும் 1991 ஆம் ஆண்டில் புதுடில்லியில் நரசிம்மராவ்ஆட்சிப்பீடமேறியது முதல் தமிழக முதல்வர் ஒருவிதமான உரசல் போக்கையே கடைப்பிடித்து வந்தார் என்பதால் இத்தகைய நிலை ஏற்படும் என்பது அரசியல் அவதானிகளால் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

### காவிரித் தகராறு:-

தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஜெயலலிதா நரசிம்மராவின் அமைச்சரவையில் தமிழகத்திற்கு உரிய கௌரவம் அளிக்கப்படவில்லை என்று ஆரம்பத்திலேயே ஆதங்கம் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் கர்நாடக மாநிலத்திலிருந்து வரும் காவேரி ஆற்றுநீர்ப் பங்கீடு தொடர்பாக கர்நாடகாவின் பங்காரப்பா அரசுடன் நேரடி மோதல் நிலை ஒன்றுக்கு இட்டுச் சென்றார். காவேரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடகஅரசு அமுல்படுத்துவதற்கு மத்திய அரசு நிர்ப்பந்தம் பிரயோகிக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே கோரிய தமிழகமுதல்வர் ஜெயலலிதாவையும், கர்நாடக முதல்வர் பங்காரப்பாவையும்புதுடில்லிக்குஅழைத்து சமரசம் செய்து வைக்க நரசிம்மராவ் எடுத்த முயற்சி வெற்றியைக்காணவில்லை. இந்தநிலையில் மத்திய அமைச்சரவையில் இணை அமைச்சராக நியமனம் பெற்றிருந்த வாழப்பாடி இராமமூர்த்தி காவேரித் தகராறில் மத்திய அரசின் அணுகுமுறையைக் கண்டித்தும், மாநில அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு

வாழப்பாடிஇராமமூர்த்தியின் இராஜினாமா ஜெயலலிதாவின் தூண்டுதலால் நிகழ்ந்தது என்றும், அ. தி. மு. கவின் சார்பாகவே வாழப்பாடி நடந்து கொள்கின்றார் என்றும், காங்கிரஸ் கட்சியின் தன்மானத்தையே வாழப்பாடி ஜெயலலிதாவிடம் அடகு வைத்து விட்டார் என்றும் அவரின் அரசியல் எதிராளிகள் விமர்சனக் கணைகளைத் தொடுத்தனர். இந்த நிலையில் காவேரிப் பிரச்சினையில் மத்திய அரசின் அணுகுமுறைக்கு ஆதரவு காட்டிய காங்கிரஸ் தலைவர்களுக்கு எதிராக அ. இ. அ. தி. மு. க. போர்க்கொடி தூக்கியது. குறிப்பாகஅப்போதய அமைச்சர் ப. சிதம்பரம், அமைச்சர் எம். அருணாசலம் போன்றோருக்கு எதிராக அ. இ. அ. தி. மு. கவின் தலைவர்கள் பகிரங்கக் கண்டனங்களைத் தெரிவித்த அதேவேளை அமைச்சர் சிதம்பரம் தமது குழுவினருடன் பயணம்செய்த கார்ஒன்று திருச்சிக்கு அருகே வழிமறிக்கப்பட்டு கல் வீச்சுக்கு இலக்கானது. இந்தச் சூழ்நிலையிலும் காங்கிரஸ்- அ.தி.மு.க. கூட்டணி தொடர்ந்தது.

### மதுரை மாநாடு-:

அ. இ. அ. தி.மு.க. கடந்த ஆண்டில் மதுரையில் நடத்திய வெற்றி விழாவில் கலந்து கொண்ட முதல்வர் ஜெயலலிதா ராஜீவ்காந்தி கொல்லப்பட்டமையினால் எழுந்த அனுதாபஅலைதான்கட்சியின் வெற்றிக்கு காரணம் என்று சொல்லப்படுவதைமறுத்தார். ராஜீவ்காந்தி கொல்லப்படாமல் இருந்திருந்தாலும், காங்கிரஸ் கட்சியின் உறவு இல்லாது போயிருந்தாலும்கூட அ.தி.மு.க. பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றிருக்கக் கூடும் என்ற பாணியில் ஜெயலலிதா பேசியது காங்கிரஸ் வட்டாரங்களில் உணர்வலைகளை ஏற்படுத்தியது. தமது கட்சித் தொண்டர்களின் உணர்வுகளை ஜெயலலிதாபுண்படுத்திவிட்டதாக காங்கிரஸ் தலைவர்கள் மனம் புளுங்கினர். எனினும் உறவு தொடர்ந்தது.

நவம்பர் மாதத்தில் தேசிய ஒருமைப்பட்டு கவுன்சில் கூட்டம் புதுடில்லியில் நரசிம்மராவ் தலைமையில் இடம்பெற்ற போது அக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஜெயலலிதா அயோத்தியா விவகாரத்தில்

தமை காங்கிரஸ் கட்சியினருக்கு விசனத்தை ஏற்படுத்திய மற்றுமொரு விடயம் எனலாம். எனினும் கூட்டணி உறவு தொடர வேண்டும் என்று காங்கிரஸ் விரும்பியது என்றே கூறலாம்.

ஏனெனில் அதன் பின் தமிழகத்தில் வீசிய புயலினால் ஏற்பட்ட சேதத்தை மதிப்பிடுவதற்காக பிரதமர் நரசிம்மராவ் தமிழகம் வரவேண்டுமென்ற அழைப்பை ஏற்று ராவ் தமிழகம் வந்தார்.

புயல், வெள்ளம் என்பவற்றால் ஏற்பட்ட சேதம் தொடர்பான மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்காக விமானம் மூலமான சுற்றுப் பயணமொன்றையும் பிரதமர் மேற்கொண்டார். இந்தச் சுற்றுப் பயணத்தில் பிரதமருடன் முதல்வரும் பங்கேற்று கூட்டணி உறவு நீடிப்பதைப் புலப்படுத்தினார்.

### சுப்பிரமணியம் சுவாமி விவகாரம்

ஜனதாக் கட்சியின் தலைவரும், மாநிலங்களவை உறுப்பினரும், கட்சிகளை உடைத்துக் குழப்ப நிலையைத் தோற்றுவிப்பதில் வல்லவர் என்று வர்ணிக்கப்படுபவருமான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி தமிழகத்தில் முகாமிட்டார், ஜனதா தளத்தைப் பலவீனப்படுத்தி அஜீத் சிங் குழுவினரைப் பிரித்தெடுத்ததும், தெலுங்கு தேசம் கட்சியை உடைத்து பத்து எம். பிக்களை நரசிம்மராவின் பக்கம் இழுத்து வந்ததும் தாமே என்று மார்தட்டிக் கொள்ளும் சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதாவின் மீதான ஊழல் பட்டியலை வாசித்தபடி தமிழகத்தை வளைய வந்தமை ஜெயலலிதாவிற்கு அச்சமூட்டியது. சுப்பிரமணியம் சுவாமியின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு ஜெயலலிதா விடுத்த கோரிக்கையை நரசிம்மராவ் கண்டுகொள்ளாமை ஜெயலலிதாவிற்குச் சினத்தை மூட்டியது தமிழக நல்லாட்சிக் கழகம் ஒன்றைத் தோற்றுவித்த டாக்டர் சுவாமியோடு முன்னாள் அ. இ. அ. தி. மு. க வினரான இராசாராம், பி. எச். பாண்டியன் போன்றோரும் சேர்ந்து கொண்டனர்.

முதல்வர்ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராக இருப்ப

றைத் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கிடம் கையளித்த சுப்பிரமணியம் சுவாமி அது தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலும் கூட வழக்கைத் தாக்கல் செய்தார். அத்துடன் ஜெயலலிதாவின் அரசுக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை சுவாமி மேற்கொண்டார். ஆரம்பத்தில் சுவாமியின் செயல்களை அலட்சியம் செய்து வந்த ஜெயலலிதா சென்னையில் அவர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை சேரிப்பெண்களை விட்டு குழப்பியடித்ததும், நீதிமன்றத்தில் ஆஜராக வந்த சுவாமிக்கு எதிராகக் கூச்சல் போட வைத்தும் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள முனைந்தார்.

### ராஜிவ் சிலை திறப்பு

சென்னையில் அமைக்கப்பட்ட ராஜிவ்காந்தி சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரசிம்மராவ் வருகை தந்த போதும் கூட கூட்டனி உறவு நீடிக்கும் என்ற நம்பிக்கையே பொதுவாக இருந்தது கன்

**இளையவன்**

னியாகுமரியில் விவேகானந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள வருகை தந்ததையடுத்து இரண்டு வாரத்தில் மீண்டும் பிரதமர் சென்னைக்கு வந்த போது காங்கிரஸ் கட்சியினர் தமது பலத்தைக் காட்ட முனைந்தனர் ஆனால் அ.இ.அ.தி.மு.க அதற்கு மூட்டுக்கட்டை போடும் வகையில் நடந்து கொண்டதாக பிரதமர் முன்னிலையிலேயே வாழப்பாடி குற்றம் சாட்டினார். கட் அவுட்டுகள் வைக்கப்பட்டது முதல் தொண்டர்களை அழைத்து வருவதற்கான வாகன ஏற்பாடு ஈறாக பலவிடயங்களிலும் அ.இ.அ.தி.மு.கவும் காங்கிரசும் ஒருவித மோதல் நிலையிலேயே செயற்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தபோதும் கூட நரசிம்மராவ் ஜெயலலிதாவின் வீட்டுக்குச்சென்று விருந்துண்டு கூட்டணி உறவு

### தமிழகத்தின் முன்னுதாரணம்

அண்மைக்காலத்தின் தமிழக வரலாற்றுப் போக்கை ஒரு தடவை இங்கு மீட்டுப் பார்ப்பதுபொருத்தமானதாக இருக்கும். அறுபதுகளின் இறுதியில் மூத்த காங்கிரஸ் தலைவர்களை ஓரங்கட்டி விட்டு பிரதமராக இந்திரா காந்திபதவியேற்ற பின்னர் தமிழகத்தின் தி.மு.க அவருக்கு பலவகையிலும் உதவியது. காமராஜ் போன்ற மூத்த தலைவர்களை ஓரங்கட்ட உதவிய தி.மு.கவோடு தோழமை பூண்டதன் விளைவாக காங்கிரஸ் கட்சியில் உடைவுகள் ஏற்பட்ட போதும் கூட அவரால் தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது.

ஆனால்எழுபதுகளின் ஆரம்பத்தில் தி.மு.கவிலிருந்து எம்.ஜி.ஆர் வெளியேறியதும் இந்திராகாந்தி அ. தி. மு. கவுடன் தமது உறவை வளர்த்துக் கொள்ள தி.மு.க மத்திய அரசுடன் மோதல் போக்கைக் கடைப்பிடித்தது. குறிப்பாக 1975 ஆம் ஆண்டின் மிசா சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வடக்கே பொலீஸ் தொல்லைக்கு முகங்கொடுக்க வேண்டிய பலதலைவர்களுக்கும் தமிழகமே புகலிடமாகியது. 1977 பொதுத் தேர்தலில் தோல்வியைத் தழுவிய பின்னர் காங்கிரஸ்தலையெடுப்பதற்கு தென் மாநிலங்கள் தோள் கொடுத்தன என்றால் அதில் தமிழகத்தின் எம்.ஜி. ஆருக்கும் அ.தி.மு.கவிற்கும் பெரும் பங்குண்டு. அந்த வகையில் இப்போது டில்லி அரசினால் தடைசெய்யப்பட்ட இயக்கங்களும் வகுப்பு வாத சக்திகளும் இப்போது தமிழகத்தில் புகலிடம் கோரியுள்ளன. தமிழ் நாட்டின் சேலம் நகரில் இந்து முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாநாடும் சென்னையில் பேரணி நடத்த பாரதீய ஜனதா விடுத்துள்ள திட்டமும் இதனை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

எனினும் ஈ. வெ. இராமசாமிப் பெரியார், பேரறிஞர் அண்ணாபோன்றோரின் பகுத்தறிவுக் கருத்துக்களால் வளர்க்கப்பட்ட தமிழகத்தில் சமய சார்பு சக்திகள் செழிக்க

சாங்கம் [illegible] ருக்கின்றது. பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் அரசிடம் சிறிதும் இல்லை'' என குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. யின் இக் குற்றச்சாட்டு முற்றிலும் சரியானது. -ஆனால், சுதந்திரக்கட்சிக்கோ, அதன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ இது குறித்துப் பேசுவதற்கு எந்தளவிற்கு தார்மீக உரிமை உள்ளது என்பது வேறு விடயம் - அரசு யுத்தத்தை சாட்டாக வைத்துத் தனது ஆட்சி அதிகாரத்தைப் பலப்படுத்துவதிலும், தமது அரசியல் எதிரிகளை ஓரங்கட்டுவதிலும், ஒழித்துக்கட்டுவதிலுமே அக்கறை காட்டுகின்றது.

இலங்கையில் பல வருடங்களாக அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. இது யுத்தத்தினைக் காரணம் காட்டி அரசாங்கத்தினால் மாதாமாதம் நீடிக்கப்பட்டு வரும் ஒன்றாக இருக்கின்றது. ஆனால் இவ்அவசரகால விதிகள் யுத்தம் நடைபெறும் வடக்கு கிழக்கிற்கு அப்பாலும் அமுலாக்கப்படுகின்றது. இது இன்று பிரேமதாசா அரசாங்கத்தின் பாதுகாப்பு அரணாக இருக்கின்றது.

அவசரகால விதிகளின் கீழ் மக்களின் சிவில் உரிமைகள் அரசாங்கத்தினால் பறிக்கப்படுகின்றன. இச்சட்டம் வேண்டியவர்களை வேண்டிய நேரத்தில் கைது செய்யவும். காவலில் வைக்கவும் காவல் துறையினருக்கு அனுமதி அளிக்கின்றது. அதேபோன்று அரசிற்கெதிராகக் கூட்டம் கூடுவதையோ அன்றி, அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதையோ அரசாங்கம் தான் விரும்பிய வேளையில், விரும்பியவாறு கையாள்வதற்கு அவசர காலச் சட்டம் வழிவகை செய்கின்றது. பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தவும், மிரட்டவும் வாய்ப்பளிக்கின்றது.

மேலும், யுத்தத்தின் பேரால் அவசர காலச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பல அடக்கு முறைச் சட்டங்கள் ஆட்சியாளரைப் பாதுகாக்கும் கவசங்கள் போன்றுள்ளன. இவை அரசின் அரசியல் எதிரிகளை அச்சுறுத்துபவையாகவும், மிரட்டுபவையாகவும் உள்ளன. பொலீஸ் படையினருக்கும், ஆயுதப் படையினருக்கும் யுத்தத்தினால் வழங்கப்பட்ட முன்னுரிமையும், வசதிகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான ஒரு பெரும் பாதுகாப்பு சுவரினை எழுப்பியுள்ளன.

அத்தோடு, அரசிற்கு எதிரான சிங்களவரின் எந்த நடவடிக்கையும் தமிழருக்கு எதிரான நடவடிக்கையாகவும், யுத்தத்தின் பிரதிபலிப்பால் ஏற்பட்ட விளைவுகள் எனவும் கூறி மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு பெரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. எடுத்துக் காட்டாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை முன்வைக்காத அரசு, நாட்டில் ஏற்பட்டுள்ள சகல பிரச்சினைக்கும் யுத்தமே காரணம் எனச் சாதிக்கின்றது.

இந்நிலையானது யுத்தம் இன்று பிரேமதாசா அரசின் அத்தியாவசிய தேவை என்பதை வெளிப்படுத்துவதாகும். பிரேமதாசாவின் ஆட்சி நீடிக்கவும், நிலைத்து நிற்கவும் யுத்தம் தவிர்க்க முடியாததாகின்றது. இதனை பிரேமதாசாவும் நன்கு உணர்ந்துள்ளார். ஆகையினால் இன்று யுத்தத்தை நிறுத்துமாறு கோருவதும், நிர்ப்பந்திப்பதும் பிரேமதாசாவைப் பதவி விலகக் கோருவதற்கு ஒப்பானதே, பிரேமதாசா இதை எவ்வாறு ஏற்றுக் கொள்வார்?

---

றுக்கு இட்டுச் சென்றார். காவேரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக நடுவர் மன்றத் தீர்ப்பை கர்நாடகஅரசு அமுல்படுத்துவதற்கு மத்திய அரசு நிர்ப்பந்தம் பிரயோகிக்க வேண்டும் என்று பகிரங்கமாகவே கோரிய தமிழகமுதல்வர் ஜெயலலிதாவையும், கர்நாடக முதல்வர் பங்காரப்பாவையும்புதுடில்லிக்குஅழைத்து சமரசம் செய்து வைக்க நரசிம்மராவ் எடுத்த முயற்சி வெற்றியைக்காணவில்லை. இந்தநிலையில் மத்திய அமைச்சரவையில் இணை அமைச்சராக நியமனம் பெற்றிருந்த வாழப்பாடி இராமமூர்த்தி காவேரித் தகராறில் மத்திய அரசின் அணுகுமுறையைக் கண்டித்தும், மாநில அரசின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு தெரிவித்தும் தமது பதவியை இராஜினாமாச் செய்தார்.

கிரஸ் கட்சியின் உறவு இல்லாது போயிருந்தாலும்கூட அ.தி.மு.க. பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்றிருக்கக் கூடும் என்ற பாணியில் ஜெயலலிதா பேசியது காங்கிரஸ் வட்டாரங்களில் உணர்வலைகளை ஏற்படுத்தியது. தமது கட்சித் தொண்டர்களின் உணர்வுகளை ஜெயலலிதாபுண்படுத்திவிட்டதாக காங்கிரஸ் தலைவர்கள் மனம் புளுங்கினர். எனினும் உறவு தொடர்ந்தது.

நவம்பர் மாதத்தில் தேசிய ஒருமைப்பட்டு கவுன்சில் கூட்டம் புதுடில்லியில் நரசிம்மராவ் தலைமையில் இடம்பெற்ற போது அக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஜெயலலிதா அயோத்தியா விவகாரத்தில் பாரதிய ஜனதாக் கட்சியின் நிலைப்பாட்டை எதிரொலித்

சுப்பிரமணியம் சுவாமி ஜெயலலிதாவின் மீதான ஊழல் பட்டியலை வாசித்தபடி தமிழகத்தை வளைய வந்தமை ஜெயலலிதாவிற்கு அச்சமூட்டியது. சுப்பிரமணியம் சுவாமியின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு ஜெயலலிதா விடுத்த கோரிக்கையை நரசிம்மராவ் கண்டுகொள்ளாமை ஜெயலலிதாவிற்குச் சினத்தை மூட்டியது தமிழக நல்லாட்சிக் கழகம் ஒன்றைத் தோற்றுவித்த டாக்டர் சுவாமியோடு முன்னாள் அ. இ. அ. தி. மு. க வினரான இராசாராம், பி. எச். பாண்டியன் போன்றோரும் சேர்ந்து கொண்டனர்.

முதல்வர்ஜெயலலிதா சட்டமன்ற உறுப்பினராக இருப்பதற்கே தகுதியற்றவர் என்பதைக் குறிக்கும் மனுவொன்

க்கு வந்த போது காங்கிரஸ் கட்சியினர் தமது பலத்தைக் காட்ட முனைந்தனர் ஆனால் அ.இ.அ.தி.மு.க அதற்கு மூட்டுக்கட்டை போடும் வகையில் நடந்து கொண்டதாக பிரதமர் முன்னிலையிலேயே வாழப்பாடி குற்றம் சாட்டினார். கட் அவுட்டுகள் வைக்கப்பட்டது முதல் தொண்டர்களை அழைத்து வருவதற்கான வாகன ஏற்பாடு ஈறாக பலவிடயங்களிலும் அ.இ.அ.தி மு.கவும் காங்கிரசும் ஒருவித மோதல் நிலையிலேயே செயற்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தபோதும் கூட நரசிம்மராவ் ஜெயலலிதாவின் வீட்டுக்குச்சென்று விருந்துண்டு கூட்டணி உறவு நீடிக்கும் என்று திருவாய் மலர்ந்தருளிலார்

டில்லி அரசினால் தடைசெய்யப்பட்ட இயக்கங்களும் வகுப்பு வாத சக்திகளும் இப்போது தமிழகத்தில் புகலிடம் கோரியுள்ளன. தமிழ் நாட்டின் சேலம் நகரில் இந்து முன்னணியின் ஏற்பாட்டில் இடம் பெற்ற மாநாடும் சென்னையில் பேரணி நடத்த பாரதீய ஜனதா விடுத்துள்ள திட்டமும் இதனை எடுத்துக்காட்டப் போதுமானதாகும்.

எனினும் ஈ. வெ. இராமசாமிப் பெரியார், பேரறிஞர் அண்ணாபோன்றோரின் பகுத்தறிவுக் கருத்துக்களால் வளர்க்கப்பட்ட தமிழகத்தில் சமய சார்பு சக்திகள் செழித்து வளருமா என்பதைக் காலம் தான் காட்ட வேண்டும்.

---

### இரு தேசங்களால் ஆளப்பட்ட

# அந்தோரா எனும் சிறிய நாடு சுதந்திர அரசாக உதயம்

## வாக்கெடுப்பில் 74 சதவீத ஆதரவு

ஐரோப்பிய பிரோனி மலையில் அமைந்துள்ள சிறிய நாடான அந்தோரா நேற்று முன்தினம் சுதந்திரம் பெற்ற தனிநாடாக உதயமானது. கடந்த பல நூற்றாண்டுகளாக இந்த சிறியநாடு அயலில் உள்ள பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளால் நிர்வகிக்கப்பட்டு வந்தது

சுதந்திரம் பெறுவதற்காக அந்தோரா நாட்டில் நடைபெற்ற சர்வசன வாக்கெடுப்பில் 74 சதவீதமான மக்கள் ஆதரவாக வாக்களித்தனர். தற்போது முழுமையாக சுதந்திரம் பெறற தனிநாடாக மாறியுள்ள அந்தோராவின் அரசியல்அதிகாரம் தெரிவு செய்யப்படும் பாராளுமன்றத்திடம் கொடுக்கப்படும்.

அந்தோரா பாராளுமன்ற தலைவர் நாடு சுதந்திரம் பெற்றதை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக அறிவித்தார். அச்சிறிய நாடு முழுவதும் இரண்டு நாட்களாக விழாக்கோலம் பூண்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இந்நாட்டின் புதிய தூதரகங்கள் பிரான்ஸ், பெல்ஜியம் பிரிட்டன், ஹொலன்ட், ஜேர்மனி ஆகிய நாடுகளில் திறக்கப்படும் என்றும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துடனான தொடர்புகள் ஏற்படுத்தப்படும் எனவும் இந்நாட்டின் பாராளுமன்ற குழு தலைவர் அறிவித்தார்.

# வசதி குறைந்தவர்களுக்கு சென்னையில் பல். கழகம்

### உலகத் தமிழர் மாமன்றம் அமைக்கும்

(சென்னை)

வசதி குறைந்த தமிழ் மக்களின் பிள்ளைகள் தொழில்நுட்ப அறிவை விருத்தி செய்யும் முகமாக உலகத் தமிழர் மாமன்றம் சென்னையில் பல்கலைக்கழகம்ஒன்றை அமைக்க தீர்மானித்துள்ளது.

இத்தகவலை உலக தமிழர் மாமன்றத் தலைவர் டாக்டர் டேவிட் சென்னையில் கடந்த 5-ம் திகதி ஆரம்பமான உலகத் தமிழர் மாமன்றத்தின் இரண்டாவது மாநாட்டில் தெரிவித்தார். தமிழைவளர்க்கவும் உலகத் தமிழர் முன்னேற்றத்திற்கு பாடுபடவும் அனைத்து தமிழர்களும்ஒன்று பட்டு உழைக்க வேண்டும் என மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இத்தகைய பல்கலைக் கழகத்தில் முதலில் பொறியியல் கல்வியும் பின்னர் மருத்துவக் கல்வியும் ஆரம்பிக்கப்படும்என டாக்டர் டேவிட் குறிப்பிட்டார்.

மாநாட்டை தமிழக நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் ஆரம்பித்து வைத்தார்.

# பம்பாய் குண்டு வெடிப்பு 'றோ' புலனாய்வு ஆரம்பம்

பம்பாய் குண்டு வெடிப்புகள் தொடர்பான புலனாய்வு விசாரணைகளை ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப்பிரிவான 'றோ' ஆரம்பித்துள்ளது. உளவுப்பிரிவு ஒன்றின் தலைமையிலான வெடிப்பொருள் ஆராய்ச்சி நிபுணர்களின் புலனாய்வும்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தடயப் பொருள்கள் பரிசோதனைக்காக தடயஇயல் மற்றும் கை ரேகை ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதேசமயம் பம்பாய் பகுதியில் இராணுவம் தயார் நிலையில் எந்நிலையையும் சமாளிக்கும் பொருட்டு வைக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் இதுவரை இராணுவம் சேவைக்கு அழைக்கப்படவேண்டிய அவசியம் எழவில்லை எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

---

### சதாமைக் கொல்வதற்காக

# கொலை பயிற்சியில் ஈடுபட்ட 5 இஸ்ரேலியர் பலி

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனை கொலை செய்யும் முயற்சிக்கான திட்டமொன்றை ஒத்திகை பார்த்த 5 இஸ்ரேலிய உளவுப் பிரிவினர் உயர் இரகசிய ஏவாயுதம் ஒன்றினால் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

நெகேவ் பாலைவனத்திலுள்ள இராணுவத் தளம் ஒன்றில் இச்சம்பவம் நடைபெற்றது.

இந்த ஏவாயுதம் தற்செயலாக உளவுப்பிரிவினரை தாக்கியது. ஐவர் கொல்லப்பட்டனர். அறுவர் காயமடைந்தனர். விபத்தை அடுத்து சதாமைக் கொலைசெய்யும் முயற்சி கைவிடப்பட்டது என்றும், சம்பந்தப்பட்ட உளவுப் பிரிவினர் கொலை முயற்சிக்காக பலமாதகாலம் பயிற்சி பெற்று வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# அகதிகளைத் தாக்கியதாக பொலீஸ் மீது குற்றச்சாட்டு

[பெர்லின்]

ஜேர்மன் பொலீஸார் வெளிநாட்டவர்களை அடித்துத் துன்புறுத்துவதாக ஜேர்மன் தொலைக்காட்சியில் வெளியான தகவலைத் தொடர்ந்து இது குறித்து விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு பெர்லின் மாநகர அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

கடந்த டிசம்பரில் வெளிநாட்டவர்கள் தொடர்ச்சியாகத் துன்புறுத்தப்பட்டனர் என்பதை உத்தியோக பூர்வமான ஆவணங்களை மேற்கோள் காட்டி தொலைக்காட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

32 வயதான ஈரானிய அகதி அடித்துத் துன்புறுத்தப்பட்டார். 31 வயதான தமிழ் அகதி ஒருவர் பொலீஸ் நிலையத்தில் அடித்துத் துன்புறுத்தப்பட்டார். அவரின் தலையை மேசை ஒன்றுடன் மோதி அடித்துத் துன்புறுத்தினார்கள் என அந்தத் தொலைக்காட்சி அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. லெபனான் வாசி ஒருவரும் இவ்வாறு துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொலைக்காட்சிச் செய்தி குறித்துப் பொலீஸார் கருத்துக் கூற மறுத்து விட்டனர்.

# போதைப்பொருளுடன் தம்பதியினர் கைது

திருச்சியில் போதைப் பொருள்கள் வைத்திருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு இலங்கையை சேர்ந்த தம்பதிகள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பிறவுண்சுகர் எனப்படும் போதைப் பொருளை இவர்கள் வைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் இளைஞர் நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

## ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக்கழகம், தனது 13வது ஆண்டு நிறைவு விழாவை இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் கொண்டாடவுள்ளது. இந் நிகழ்வில் உரை நிகழ்வுகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

### தவறவிடப்பட்ட பொதிகள்

கொழும்பு - யாழ். பயணிகளால் தவறவிடப்பட்ட பொதிகள் சில நீண்டநாட்கள் மீட்கப்படாமல் கிளிநொச்சி எம். ஆர். எஸ். போக்குவரத்துச் சேவை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டு திருமண வீடியோ பட பிரதிகளும் அங்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன உரியவர்கள் அடையாளம் காட்டி பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

# அமைதிப்பணியில் ஈடுபட ஆப்கானுக்கு ஈரான் படை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் போட்டிக் குழுக்களுக்கிடையே அமைதிகாண்பதற்கான உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து அமைதி காப்பு பணியில் ஈடுபடுவதற்கென ஈரான் துருப்புக்கள் அனுப்பி வைக்கப் படவுள்ளன. ஆப்கானிஸ்தானில் யுத்த நிறுத்தத்தைப் பேணவும் கருத்து வேறுபாடுகளைக் களையவும் போட்டிக் குழுக்கள் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள ஈரான், ஏனைய நாடுகள் ஆப்கானிஸ்தானில் அமைதியை நிலைநாட்ட உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் மோதலில் ஈடுபட்டிருந்த முஜாகிதீன் குழுக்களின் தலைவர்கள் அண்மையில் பாகிஸ்தானில் சந்தித்துப் பேச்சு நடாத்தியதும் அதன் பின்னர் ஆப்கான் தலைவர்கள் ஈரான், சவூதிஅரேபியா நாடுகளுக்கு விஜயம் செய்ததும் தெரிந்ததே.

ஆப்கான் அதிபர் பதவியில் ரபானி நீடிக்கும் அதேசமயம் முஜாகிதீன் குழுத் தலைவர்களில் ஒருவரான குப்புதீன் ஹேக்மத்தியார் பிரதமர் பதவியை வகிக்கவுள்ளார். பதினெட்டு மாத காலத்தில் தேர்தல் நடாத்தப்படும் எனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

## காங்கிரஸ் உறுப்பினர் மீதான தாக்குதல்

# அ.தி.மு.க. மீது பழிசுமத்த நடாத்தப்பட்டதாம்

(சென்னை)

சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதல் காங்கிரஸ் கட்சியினராலேயே திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கலாம் என்றே தனக்குத் தெரியவருவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

நேற்று சட்டப்பேரவையில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தமக்கு கிடைத்த தகவலின்படி பீட்டர் அல்போன்ஸ் மீது நடத்தப்பட்ட தாக்குதல் காங்கிரஸ் கட்சியினர் வேண்டுமென்றே ஏற்படுத்தியதொன்று எனவும், தாக்கியவர்களில் ஒருவரான சுதாகோபாலுக்கும் தாக்கப்பட்டவரான பீட்டர்அல்போன்ஸிற்கும் இடையே தொடர்பு இருந்திக்கலாம் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் அ. இ. அ.தி.கவின் மீது பழிசுமத்துவதற்காக காங்கிரஸ் கட்சியினர் திட்டமிட்டு ஏற்படுத்தியதொன்றுதான் பீட்டர் அல்போன்ஸ்மீதான தாக்குதல் சம்பவமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

## தமிழக சட்டசபையில் கூச்சலும் குழப்பமும்

தமிழக சட்டப்பேரவையில் நேற்றும் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

நேற்றுக்காலை சட்டப் பேரவை மீண்டும் கூடியபோது சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் தாம் தாக்கப்பட்ட சம்பவம் பற்றி காங்கிரஸ்கட்சி எம்.எல். ஏ. பீட்டர் அல்போன்ஸ் பேசினார். அப்போது தமது தொகுதியில் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு புனர்வாழ்வு, நிவாரணம் போன்ற பணிகளில் நடந்த முறைகேடுகள் பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தாம் சுட்டிக்காட்டியதாகவும், சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தொடர் முடிவடைந்த பின்னர் தாம் ஒழுங்காக வீடு திரும்ப முடியாது என்று அ. தி.மு க.சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் பொதுக்கூட்டமொன்றில் பேசியதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் மாவட்ட பொதுப் பணித்துறை அதிகாரி ஒருவர் சட்டப்பேரவையில் இந்த முறைகேடுகள் பற்றிக் குறிப்பிடவேண்டாம் என்று தம்மிடம் பேசியதாகவும் பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்தார். இதனை அ. தி. மு. க.உறுப்பினர்கள் கடுமையாக ஆட்சேபித்ததை அடுத்து ஆளும் கட்சியினருக்கும், காங்கிரஸ் கட்சியினருக்கும் இடையே பலத்த வாக்கு வாதங்கள் ஏற்பட்டு சபையில் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

## யாழ். மாவட்டப் பாடசாலை உடற்பயிற்சிப் போட்டி

யாழ் - மாவட்டப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி நாளை காலை 8.00 மணிக்கு யாழ் - பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

கோட்ட மட்டப் போட்டிகளில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிரு இடங்களைப் பெற்ற அணிகளும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கின்றன. ஏறக்குறைய 3000 மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது

வெற்றி பெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கப்படவிருக்கின்றன. விசேட பரிசில்களாக தமிழீழ விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு, முதலிடத்தைப் பெறும் அணிக்கு ரூபா 2000/- உம், இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு ரூபா1500/- உம், மூன்றாம் இடத்தைப் பெறும் அணிக்கு ரூபா 1000/- உம் வழங்கவிருக்கிறது.

இவ் விழாவின் தலைவராகப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் V. சண்முகராசாவும், முதன்மை விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்களும் கலந்து கொள்கிறார்கள். தமிழீழத் தேசியக் கொடி தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனால் ஏற்றி வைக்கப்படும். திருமதி. தேவராணி சுந்தரலிங்கம் அவர்கள் பரிசில்கள் வழங்குவார்

இதே தினம் யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் பி. ப. 12.30 மணிக்கு மூடப்படவுள்ளன.

## மினிபஸ் தடம்புரண்டு 4 பேர் படுகாயம்

பண்டித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு சென்று திரும்பும் வழியில் மினிபஸ் தடம்புரண்டதில் நால்வர் படுகாயமடைந்தனர்.

வேகமாக சென்றுகொண்டிருந்த இந்த மினிபஸ் சிறுப்பிட்டியில் வீதியை விட்டுவிலகி தடம்புரண்டதாகவும் அப்போது அம்மினிபஸ்சில் பயணம் செய்த சுப்பிரமணியம் செல்வரட்ணம் (வயது 56) சுபாஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி, ... கடற்கரைவீதி, யாழ்ப்பாணம், பூதத்தம்பி சிவபரன் (வயது 15) நீர்வேலி வடக்கு என்பவர்கள் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### மட்டக்களப்பில்

வடிவேல் - மேகநாதன் நாவலம்பிட்டி, பொன்னுத்துரை- அன்பு, நாவலம்பிட்டி, வைரமுத்து-கந்தன், நாவலம்பிட்டி, கந்தையா - ஆனந்தன் திகிலிவெட்டை, மாணவன் ...

## அமெரிக்க நிபுணர் குழு பம்பாய் சென்றது

பம்பாய் வெடிகுண்டுச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய ஒன்பது பேர் அடங்கிய அமெரிக்க வெடிகுண்டு நிபுணர்கள் குழு ஒன்று பம்பாய் வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நியூயோர்க்கில் இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்பிற்கும் பம்பாய் குண்டு வெடிப்பிற்கும் இடையேயுள்ள தொடர்பை இக்குழு ஆராயும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பம்பாய் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக குண்டுகளை வைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளின் சொந்தக்காரர் என்று கூறப்படும் இருவர் பொலீசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலும் வெடிக்காத குண்டு ஒன்றுடன்கண்டுபிடிக்கப்பட்ட கார் ஒன்றின் சொந்தக்காரரும், அவரது குடும்பத்தினரும் குண்டு வெடிப்பிற்கு சில நாள் முன்னதாக டுபாய் சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் குடும்பத்தினர் போதைப் பொருள் கடத்தலுடனும் தொடர்புடையவர் என்றும் பொலீசார் கூறியுள்ளனர்.

## பம்பாய் குண்டுவெடிப்பு

## முஸ்லிம் தீவிரவாத குழுமீது அதிகாரிகள் சந்தேகம்

பம்பாய் குண்டு வெடிப்புகளுடன் பிரபல கடத்தல்காரர்கள் எனக் கூறப்படும் இரு முஸ்லிம் சகோதரர்களுக்கு சம்பந்தம் இருப்பதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் இச் சகோதரர்கள் தாம் இருந்த ஆடம்பர தொடர்மாடி வீட்டை விட்டு டுபாயிற்கு தப்பியோடி விட்டதாக இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேசமயம் குண்டுவெடிப்புகள் தொடர்பாக பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முஸ்லிம் குழுக்கள் மீதும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். கைக்குண்டுகளுடன் கார் ஒன்று மீட்கப்பட்டதையடுத்து இச் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்

## சீக்கிய தீவிரவாதிகள் உரிமை கோரினர்

(மணிலா)

இந்தியாவில் பம்பாய் நகரில் நேற்று ஒரு வெடிகுண்டை பொலீசார் செயலிழக்கச் செய்தனர். கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த வெடிகுண்டு சம்பவத்தைநிகழ்த்தியவர்கள் யார் என்ற ஆராய்ச்சியை பொலீசார் தீவிரமாக நடத்தி வருகின்றனர்.

சீக்கிய போராளி குழு ...

பஞ்சாப்பில்உள்ள போராளி குழுக்களில் காலிஸ்தான் மட்டுமே இதுவரை கார் வெடிகுண்டுகளை வைத்து போரிட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## குண்டு வெடிப்பிற்கு காங்கிரஸே காரணம்

## மரண அறிவித்தல்கள்

### பொன் கந்தையா

கிளிநொச்சியைச் சேர்ந்த பொன் கந்தையா அவர்கள் (14-03-93) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார். அன்னார் ரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், ரஞ்சிததேவ், தங்கேஸ்வரன், திருவருட்செல்வன், கேசவன், தேவீஸ்வரன், கமலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

341, திருநகர்.
கிளிநொச்சி.
[4486]

தகவல்:
க. தங்கேஸ்வரன்
(வினோதன்)

### திருமதி சின்னையா பவளம்மா

சாவகச்சேரி பிரசித்த நொத்தாரிஸ், மொழிபெயர்ப்பாளர், முன்னாள் சாவகச்சேரி பட்டினசபை உபதலைவர், இத்தியடிப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சின்னையாவின் அன்பு மனைவி பவளம்மா 15-03-93 நேற்று பகல் 11 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் வல்லிபுரநாதன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இராமநாதன் (கனடா, ரொறன்ரோ எஞ்சினியர்), யோகராசா (படவரைஞர், நீர்ப்பாசன திணைக்களம்), விஸ்வநாதன் (நிலஅளவையாளர், நிலஅளவைத் திணைக்களம்), கிருஷ்ணநாதன் (கணக்காளர், நைஜீரியா), சண்முகநாதன் (எஞ்னியர், சிங்கப்பூர்), சோதிநாதன்

தின் பின்னர் இச் சகோதரர் கள் தாம் இருந்த ஆடம்பர தொடர்மாடி வீட்டை விட்டு டுபாயிற்கு தப்பியோடி விட்ட தாக இந்திய நாளிதழ் ஒன்று

னர். கைக்குண்டுகளுடன் கார் ஒன்று மீட்கப்பட்டதை யடுத்து இச் சந்தேகம் ஏற்பட் டுள்ளதாக அவர்கள் தெரிவித் தனர்

## சீக்கிய தீவிரவாதிகள் உரிமை கோரினர்

(மணிலா)

இந்தியாவில் பம்பாய் நக ரில் நேற்று ஒரு வெடிகுண்டை பொலிசார் செயலிழக்கச் செய் தனர். கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த வெடிகுண்டு சம்ப வத்தைநிகழ்த்தியவர்கள் யார் என்ற ஆராய்ச்சியை பொலீ சார் தீவிரமாக நடத்தி வரு கின்றனர்.

சீக்கிய போராளி குழு தாமே இந்த வெடி குண்டு களை வைத்ததாக பொறு ப்பு என கூறியுள்ளது. மத் திய அரசுக்கும் மற்றும் பஞ் சாப் மாநில அரசுக்கும் எதி ர்ப்பு தெரிவிக்கும் வகையில் காலிஸ்தான் கமோண்டோ போராளி குழுவின் போராளி கள் இந்த வெடிகுண்டுகளை வைத்ததாக இக்குழுவைச் சேர்ந்த ஒருவர் பி.டி.ஐ. செய்தி நிறுவனத்திடம் தெரி வித்துள்ளார்.

பஞ்சாப்பில்உள்ள போராளி குழுக்களில் காலிஸ்தான் மட் டுமே இதுவரை கார் வெடி குண்டுகளை வைத்து போரிட் டிருப்பதாகவும் கூறப்படுகின் றது.

## குண்டு வெடிப்பிற்கு காங்கிரஸே காரணம்

(டில்லி)

பம்பாயில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களு க்கு ஆளும் காங்கிரஸ் கட்சியே பொறுப்பு என்று பாரதீய ஜனதாவின் யஸ்வந்த்சிங் பாராளுமன்றத்தில் தெரிவித் தார்.

அவர் மேலும் கூறுகையில்; எல்லைக்கு அப்பாலிருந்து மேற்கொள்ளப்படும் ஆயுதக் கள்ளக் கடத்தல் தொடர்பாக

சுட்டிக்காட்டினார்.

மேலும் மாவட்ட பொதுப் பணித்துறை அதிகாரி ஒருவர் சட்டப்பேரவையில் இந்த முறைகேடுகள் பற்றிக் குறிப் பிடவேண்டாம் என்று தம்மி டம் பேசியதாகவும் பீட்டர் அல்போன்ஸ் தெரிவித்தார். இதனை அ.தி.மு.க.உறுப்பி னர்கள் கடுமையாக ஆட்சே பித்ததை அடுத்து ஆளும் கட் சியினருக்கும், காங்கிரஸ் கட்சி யினருக்கும் இடையே பலத்த வாக்கு வாதங்கள் ஏற்பட்டு சபையில் கூச்சலும் குழப்பமும் நிலவியது.

### பா. ஜ. குற்றச்சாட்டு

கிடைக்கும்தகவல்களை ஆளும் கட்சி புறக்கணிப்பு செய்து வந்ததாகவும் குறிப்பிட்டார்.

### புலிகளின்

கொள்ளையிடப்பட்டதாகவும் இவர்கள் சேனைக் குடியி ருப்பு பகுதியில் கட்டுமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் கூறிய இவர், உயர் அதிகாரிகள் தகுந்த நட வடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

புலிகளின் பெயரைச் சொல்லி கிராம மக்களுக்கு நன்கு தெரிந்த முஸ்லிம் ஊர்காவல்படையினரே இக் கொள்ளைகளில் ஈடுபடுவதாக இக் கூட்டத்தில் பலர் முறை யிட்டனர்.

### ஐரோப்பாவில்

சுமார் 7 சதவீதமாகவே இருந் தனர் என தெரியவந்துள்ளது.

அண்மையில் புரூசெல்ஸ் நக ரில் ஐரோப்பிய சமூகத்தின் ஐரோப்பிய சிரேஷ்ட பிரஜை கள் ஆண்டு பிரகடனப்படுத் தப்பட்டபோது அதில் கலந்து கொண்ட ஐரோப்பியஆணைக் குழுவின் தலைவர் ஜாக்வஸ் டெலோஸ் 60 ஆயிரம் மக்கள் மத்தியில் உரை நிகழ்த்துகை யில் இந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இத்தகைய வயது முதிர்ந்த பிரஜைகள் தொடர்பான பிரச்சினை ஒரு நெருக்கடி நிலைமையை அடைந் துள்ளது என தெரிவித்தார்.

குறிப்பாக அவர்களுக்கான வாழ்க்கைத்தரம், சுகாதாரம் போன்ற விடயங்களில் அக் கறை குறைந்து வருதல் சமூ கத்தில் இருந்து ஒதுக்கப்படு கின்றமையும் தனிமைப்படுத் தப்படுகின்றமையும் போன்ற விடயங்கள் அவரால் சுட்டிக் காட்டப்பட்டன. அத்துடன் அண்மைக் காலத்தில் இவர் கள் மத்தியில் தற்கொலை செய்துகொள்வோரின் தொகை அதிகரித்துள்ளதாக இவர் தெரிவித்துள்ளார்.

அமைப்பு, முதலிடத்தைப் பெறும் அணிக்கு ரூபா 2000/-

டப் பாடசாலைகள் அனைத் தும் பி.ப. 12.30 மணிக்கு மூடப்படவுள்ளன.

## மினிபஸ் தடம்புரண்டு 4 பேர் படுகாயம்

பண்டித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு சென்று திரும்பும் வழியில் மினிபஸ் தடம்புரண் டதில் நால்வர் படுகாயமடை ந்தனர்.

வேகமாக சென்றுகொண் டிருந்த இந்த மினிபஸ் சிறுப் பிட்டியில் வீதியை விட்டுவிலகி தடம்புரண்டதாகவும் அப் போது அம்மினிபஸ்சில் பய ணம் செய்த சுப்பிரமணியம் செல்வரட்ணம் (வயது 56) சுபாஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி, திருமதி கமலாம்பிகை சிவா னந்தன் (வயது 33) சுபாஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி, ஏ. ஸ்ரனிஸ்லாஸ் (வயது 56) கடற்கரைவீதி, யாழ்ப்பாணம், பூதத்தம்பி சிவபரன் (வயது 15) நீர்வேலி வடக்கு என்ப வர்கள் படுகாயமடைந்ததாக வும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### குமண

புறப்பட்டுச் செல்கின்றது. நாளை மீண்டும் பருத்தித்து றையை வந்தடையும் எனவும் இங்கிருந்து கொழும்பிற்கு அதிவிசேட சிகிச்சைக்குச் செல் லும் நோயாளர்களையும் மற் றும் தபால் பொதிகளையும் எதிர்வரும் வியாழக்கிழமை ஏற்றிச் செல்கின்றது எனவும் தெரியவருகின்றது. [பா],[நி]

### மட்டு

லைகள் மட்டுப்படுத்தப்படுகி ன்றது, தொழிலில் ஈடுபடுப வர்கள் சிங்கள ராணுவத்தால் கைதுசெய்யப்படுவது, காணா மல்போவதும், கொடூரமான முறையில் கொலை செய்யப் படுவதும் வழக்கமாக நடை பெறுகின்றன.

மாவட்டத்தின் பிரதான தொழில்களில் தமிழ்மக்கள் ஈடுபடுவதற்கு பாதுகாப்பற்ற ஒரு நிலையை தோற்றுவித் துள்ள சிங்கள அரசு, ஆடைத் தொழிற்சாலை நிறுவுதல் மூல மாக தமிழ்மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதாகக் கூறு வது எவ்வளவு வேடிக்கையா னதாகவுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை யொன்றை நிறுவுவதன் மூலம் சுமுகமான சூழ்நிலை தோற்று விக்கப்பட்டுள்ளதாக வெளி யுலகத்திற்கு தெரியப்படுத் தவே இந்த முயற்சியில் சிங் கள அரசு ஈடுபடுகின்றது.

மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளில் ஒவ்வொருநாளும் தமிழ்த் தொழிலாளர்கள் தாக்கப்பட்டும் கொல்லப்பட் டும், பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கும் போது, நகரில் மாத்திரம் ஒரு ஆடைத் தொழிற்சாலையை அமைத்து கிழக்குத் தமிழ் மக் கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கவுள்ளதுபற்றி சிங்கள அரசு பேசுவது அரசின் கபடத்தன்மையை எமக்கு உணர்த்துகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றோம்.

### மட்டக்களப்பில்

வடிவேல் - மேகநாதன் நாவ லம்பிட்டி, பொன்னுத்துரை- அன்பு, நாவலம்பிட்டி, வைர முத்து-கந்தன், நாவலம்பிட்டி, கந்தையா - ஆனந்தன் திகிலிவெட்டை, மாணவன் தேவகரன், திகிலிவெட்டை ஆகியோருக்கு கண்ணீர் அஞ் சலியைத் தெரிவித்துக்கொள் ளுகின்ற வேளையில் இவர் களை இழந்து தவிக்கும் குடும் பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக்கொள்கின்றோம். தமிழின அழிப்பில் ஈடுபட் டுள்ள சிங்கள இனவெறி அரசு இவ்வாறான படுகொ லைகளைப் புரிந்து விட்டு தனது மக்கள் தொடர்புச் சாதனங்களில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளி யிட்டுக் கொண்டிருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்காவின் ஜனாதிபதி தொழிற்சாலைகளை திறந்து கொண்டிருக்கின்ற இவ் வேளையிலேயே இங்கு தமிழ்த் தொழிலாளர்கள் கொடூர மான முறையில் கொல்லப் பட்டிருககின்றார்கள். இவை கள்தாம் சிறிலங்கா அரசின் நிலைப்பாடு என்பதை நாம் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது மக்களின் அழிவில் தான் சிங்கள அரசு தார்மீகம் பேசுகிறது. தர்மத்தின் அடிப் படையில் போராடுகின்ற எம் மைக் களங்கப்படுத்துகின்றது.

சிங்கள அரசின் கொடூர மான படுகொலைகளில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பதே எமது அளப் பரிய பணியாகும் இப்பாது காப்பை நாம் உறுதிப்படுத் தியே தீருவோம். சிங்கள அர சின் இக்கொடூரப் படுகொலை களைத் தடுத்து நிறுத்த மனி தாபிமான முள்ள சிங்கள மக் களும் உலக சமுதாயமும் முன் வரவேண்டும்.

இப்படுகொலைகளின் மூலம் தமிழ் மக்களை முற்றாக அழிப்பதினையே சிங்களப் படையின் எண்ணமாக இருக் கின்றது என்பதை நாம் தெளி வுபடுத்துகின்றோம்.

இவ்வாறான படுகொலைக ளைப் புரிவதற்குகாரணமாக அமையும் சிங்கள அரசை நாம் வன்மையாகக் கண்டிக்கின் றோம் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

## வாழ்த்துகின்றேன்

சுருட்டுத் தொழிலாளர் சங்கம் இருவருடத்தை நிறைவு செய்வதை முன்னிட்டு எமது வாழ்த்துக்கள் உரியதாகட்டும். வருங்காலத்திலும் சுருட்டுத் தொழிலா ளர் சங்கம் எந்த வேறுபாடுகளுக்கும் இடமளியாது, தொழிற்சங்கங்களுக்கு ஒரு முன்னோடியாக மிளிர்ந்து பன்னெடுங்காலம் சிறந்த பணியாற்ற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

நா. கந்தசாமி
[4482] பசாவிளான்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 15-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8622

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-6168, 24-4282, 41-8432, 24-4103, 41-9396, 26-8878, 26-4727, 42-2364, 27-3927, 26-1690, 24-7327, 26-4657, 27-9105, 41-5599, 28-9327, 26-3518, 24-5818.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-7261, 26-3893, 27-5775, 28-9186, 42-1320, 71-4984, 26-3633, 24 0878, 42-3815, 26-8839, 26-6984, 28-1049.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

தையும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

341, திருநகர்,
கிளிநொச்சி.
[4486]

தகவல்:
க. தங்கேஸ்வரன்
(வினோதன்)

## திருமதி சின்னையா பவளம்மா

சாவகச்சேரி பிரசித்த நொத்தாரிஸ், மொழிபெயர்ப் பாளர், முன்னாள் சாவகச்சேரி பட்டினசபை உபதலை வர், இத்தியடிப் பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சின்னையாவின் அன்பு மனைவி பவளம்மா 15-03-93 நேற்று பகல் 11 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் வல்லிபுரநாதன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இராமநாதன் (கனடா, ரொறன்ரோ எஞ்சினி யர்), யோகராசா (படவரைஞர், நீர்ப்பாசன திணைக் களம்), விஸ்வநாதன் (நிலஅளவையாளர், நிலஅளவைத் திணைக்களம்), கிருஷ்ணநாதன் (கணக்காளர், நைஜீரியா), சண்முகநாதன் (எஞ்னியர், சிங்கப்பூர்), சோதிநாதன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர்), பாலநாதன் (நீர்வள சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), கருணைநாதன் (காரியாலய உத்தியோகத்தர், இலண்டன்), குகநாதன் (கொம்பியூற்றர் இயக்குனர், இலண்டன்), சந்திரலேகா, பாக்கியலட்சுமி (ஆயுர்வேத டாக்டர்), சுமங்களராணி (பட்டதாரி ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானேஸ்வரி, பராசக்தி, காஞ்சனா, மங்களேஸ்வரி, வடி வழகி, அமிர்தவள்ளி, கல்பனா, சுகந்தா, ஈஸ்வரதா சன், சத்திதாசன், முத்துரமணிதரன் ஆகியோரின் அன்பு மாமியும், கெங்காதரன், கீதா, நிரஞ்சன், தினேஸ், குமுதா, கவிதா, சிகப்பிரகாஸ், சகிலா, தர் மிலா, புவிராஜன், இலக்ஸ்மன், தர்சனா, நிசாந்தன், தனுசா, கிருபாகரன், சிறீபிரகாஸ், ஜெயபிரகாஸ், ராஸ்பிரகாஸ், சம்யுதா, அபிராமி, பிரியதர்சன் ஆகி யோரின் அன்பு பேர்த்தியும், சிவபாக்கியம், நித்தியலட் சுமி, திருநாவுக்கரசுசாமி, நல்லம்மா, தம்பியையா, துரைசாமி, சிவயோகம் ஆகியோரின் சகோதரியும், கனக சபை துரையம்மா ஆகியோரின் புதல்வியுமாவார். அன னாரின் ஈமக்கிரியைகள் 16-03-93 இன்று பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பியோர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

"சிவபதி"
சங்கத்தானை
சாவகச்சேரி. [4485]

தகவல்:
வ. சின்னையா
(கணவன்)

## K. K. ராஜ் (திருமலை)

ராஜ் அவர்கள் 10-03-93 புதன்கிழமை ஜேர்மனி யில் மாரடைப்பால் காலமானார். அன்னார் திருமலை யைச் சேர்ந்த குமாரசாமி திரவியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், வசந்தாவின் (ஜேர்மனி) அன்புக் கணவரும், வினிஜா (ஜேர்மனி), ஐங்கரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணதாஸ், வனிதா (டென்மார்க்), பாலதாஸ் (நோர்வே), கிருபாகரன் (ஜேர் மனி), நந்தினி (இந்தியா), சுதாகரன் (ஜேர்மனி), மதி வதனி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அல்வாய் வடக்கு, இன்பருட்டியைச் சேர்ந்த அ.சி. தங்க ராசா - சிவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சற் குணராசா (பிரான்ஸ்), யோகராசா, சசிகலா (ஆசிரியை அல்வாய் வடக்கு சற்கோட்டை றோ.க.த.க.பாடசாலை இராசவினோதன் (சுவிஸ்), இராசலட்சுமி, சந்திரகலா, நித்தியானந்தன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத் துனருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு,
அல்வாய். [சி-6208]

தகவல்:
அ. சி. தங்கராசா
(மாமனார்)